பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 28 செவ்வாய்க்கிழமை 13.07.2021 கதிர் 250

### இனி இது ரகசியம் அல்ல!

அரசியல்வாதிகள் பத்தடி பாய்ந்தால் அவர்களின் எடுபிடிகள் பதினாறு அடி பாய்வார்கள். ஒட்டிக் கொண்டு இருப்பவர்கள் முப்பத்திரண்டு அடி பாய்வார்கள். இதுதான் தமிழர் தரப்பில் இப்போது நடக்கும் அரசியல் சித்து விளையாட்டு. இதற்கு முற்றுப்புள்ளி 2

# ஒன்பது இந்திய ட்ரோலர்களை அழிப்பதற்கு நீதிமன்று அனுமதி

## கடற்படையின் கோரிக்கை ஏற்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை13

மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 இந்திய ட்ரோலர்களில் 9 ட்ரோலர்களை அழிக்க மன்னார் நீதிமன்றம் நேற்றைய தினம் அனுமதி வழங்கியது. 2

## மேலும் 31 பேர் பலி மொத்தச் சாவு 3,533

கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 15 பெண்களும், 16 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். 2

## கோட்டாபயவின் வெற்றியில் சு.கவின் பங்களிப்பும் உண்டு

### நன்றி மறக்க வேண்டாம் என 'மொட்டு'க்கு தயாசிறி பதிலடி



ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பங்களிப்பும் உள்ளது. இதனைப் புரிந்துகொள்ளாமல், நன்றி மறந்து விமர்சிக்கின்றனர்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

'ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணியில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறுவதால் அரசின் இருப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கடந்த பொதுத் 2

## இலங்கையில் 1,488 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று

நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,488 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 76 ஆயிரத்து 26ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் 2

## மஹிந்தவுடன் துமிந்த



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று நேரில் சந்தித்தார்.

இன்று அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தேன் என்று துமிந்தா சில்வா தனது உத்தியோகபூர்வ 'பேஸ்புக்' பக்கத்தில் நேற்று பதிவிட்டுள்ளார். 2

## யாழில் இரண்டாம் கட்டமாக 50,682 பேருக்கு முதல் டோஸ்

(இ.கலையமுதன்)

இரண்டாம் கட்டத்துக்கான முதல் டோஸ் தடுப்பூசியை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதுவரை பெற்றுக்கொண்டனர்.

கடந்த வாரம் முதல் யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு இரண்டாம் கட்டத்தின் முதல் டோஸ் வழங்கப்பட்டது. இதன்போதே நேற்று வரை 50 ஆயிரத்து 682 பேர் சினோபோர்ம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர்.

1,825 பேர் நேற்றைய தினமும் கொரோனாத் தடுப்புக்கான சினோபோர்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் காயம்

கிளிநொச்சி மாவட்டம், தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்த வெடிவிபத்தில் இரண்டு பிள்ளைகளின் 2

## எதிரணியுடன் இணையாது சு.க.

### அமைச்சர் அமரவீர திட்டவட்டம்



அரச கூட்டுக்குள் பிரச்சினைகள் இருப்பினும் அரசில் இருந்து விலகி எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராக இல்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா 2

## ஸ்டாலினின் கைதுக்கு எதிராக ஐ.நாவிடம் மகஜர் கையளிப்பு



(ந.லோகதயாளன்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் ஆசிரியர் சங்கம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

கொழும்பில் ஆசிரியர் சங்கம் சார்பில் மேற்கொண்ட ஜனநாயகப் போராட்டத்தின்போது ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டு 2

## மாகாணங்களுக்கிடையிலான பொதுப்போக்குவரத்து ஆரம்பம்

### அத்தியாவசிய சேவைகளைக்காக மாத்திரம்



மாகாணங்களுக்கு இடையிலான பொதுப்போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட ரீதியில் அத்தியாவசிய சேவைகளைக் கருத்தில்கொண்டு மாகாணங்களுக்கு இடையிலான 2

## இனி இது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்க ஆளும் தரப்பின் உயர் மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு இருப்பதாக தெரிகின்றது.

அரசின் உதவி திட்டங்களைத் தங்களுடைய சொந்தத் திட்டம் போலக் காட்டுவது, பயனாளிகளைத் தெரிவு செய்கின்ற அரசு அதிகாரிகளின் கடமையில் பலவந்தமாகத் தலையிட்டு, தம் விருப்பப்படி பயனாளிகளைத் தெரிவு செய்து, அரசு உதவிகளை அவர்களுக்குத் தாமே வாரி வழங்குவது போன்ற அடாவடித்தனங்கள் ஒருபுறம் என்றால், மறுபுறம் அந்த அடாவடித்தனங்களுக்கு வேண்டுமென்றே விரும்பிச் சேர்ந்து சோரம் போய், அதன்மூலம் ஆளும் தரப்பில் ஒரு சிலரிடம் செல்வாக்கை ஏற்றிக்கொண்டு, அதைப் பயன்படுத்தி ஊரை அடித்து உலையில் போட்டு ஏப்பம் விட்ட அரசு அதிகாரிகள் பக்கமும் கொழும்பின் கவனம் இப்போது திசை திரும்பி இருப்பதாகவும் தெரிகின்றது. முறையற்ற விதத்தில் அளவுக்கு மேல் சொத்துச் சேர்த்தவர்கள், அதன்மூலம் வீடு,வாசல், கட்டடங்கள் கட்டியவர்கள், ஊரை அடித்து பொக்கட்டில் போட்டவர்கள் என்றெல்லாம் வடக்கில் எந்தெந்த அதிகாரிகளுக்கு எதிராகவெல்லாம் முறைப்பாடுகள் வந்துள்ளனவோ அவர்களெல்லாம் விரைவில் விசாரணை வலைக்குள் வளைக்கப்படுவார்கள் என்று உறுதியாகத் தெரிகிறது. லஞ்ச, ஊழல் விசாரணைத்துறை அதிகாரிகள், விசேட அதிரடிப்படை அதிகாரிகள் என்ற தரப்புக்களை சேர்ந்த உயர் குழாம் ஒன்று வடக்கில் கால் பதித்து நின்று, நிலைத்து, பாச்சல் நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகி வருவதாகவும் தெரிகிறது.

அரச தரப்பு எம்.பி. ஒருவரின் வலதுகரமாக தம்மைக் காட்டிக்கொள்ளும் ஒருவர் நியமனங்கள் வாங்கித் தருவார் எனக் கூறிப் பலரிடம் கறந்துள்ளமை பற்றிய விடயங்களும் கூட விவரச் சேகரிப்பில் அடங்கும் என்கின்றன கொழும்புத் தகவல்கள்.

இப்போது பிளான் பண்ணப்படும் பாய்ச்சலில் தமிழ்த் தேசியம் பேசும் தரப்புக்கள் இல்லை என்றும் தெரிகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தரப்புக்கு எதிராகவும் பெரிய அளவில் குற்றச்சாட்டுக்கள் இல்லை. எனினும் இத்தகைய 'ஒப்பரேஷன் கிளீனிங்' நடவடிக்கை ஒன்று தமிழர் தாயகப் பகுதியில் விரைவில் இடம்பெற இருப்பது பற்றிய தகவல்கள் அமைச்சருக்குத் தெரியுமென சில வட்டாரங்கள் தெரிவித்தன. எடுபிடிகள், ஒட்டி கொண்டோரின் திருகுதாளங்கள், அவர்களின் தலைவர்களைப் பெருமளவில் மண் கவ்வ வைக்கலாம் என்பதுதான் இப்போதைய நிலைமை. சிக்கப் போகும் எடுபிடிகள், அரசு அதிகாரிகள் யார் யாராக இருப்பார்கள் என்பதை நமது வாசகர்கள் ஊகிப்பதில் அப்படி ஒன்றும் கஷ்டம் இருக்காது என்று நம்புகிறேன். ஏனெனில் நமது வாசகர்கள் கில்லாடிகள்.

- மின்னல் -

## மாகாணங்களுக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுப்போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இதன்படி, நாளை புதன்கிழமை முதல் அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுள்ளோருக்காக இந்தப் பொதுப்போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஸ்டாலினின் கைதுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களைத் தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் பொலிஸார் முல்லைத்தீவு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தியுள்ளனர்.

இதனைக் கண்டித்தே ஆசிரிய சங்கத் தலைவர் உள்ளிட்டவர்களால் நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜர் கையளிப்பதற்காக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ மற்றும் உப தலைவர் எம்.எம்.சமீன் மற்றும் மத்திய குழு உறுப்பினர் எம்.எம்.எம். லுத்பி உட்பட மத்திய குழு உறுப்பினர்கள் நேரில் சென்றிருந்தனர்.

## ஒன்பது இந்திய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்ட கடல் பரப்பிற்குள் ஊடுருவிய சமயம் மடக்கிப் பிடிக்கப்பட்ட இந்திய விசைப் படகுகளில் தற்போதும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 படகுகளில் 9 படகுகள் முழுமையாக சேதமடைந்த நிலையிலும் எஞ்சிய 9 படகுகள் பழுதடைந்த நிலமையிலும் காணப்படுகின்றன. இவ்வாறுள்ள 18 படகுகளில் முழுமையாக சேதமடைந்துள்ள 9 படகுகளை அழிப்பதற்கும் எஞ்சிய 9 படகுகளையும் ஏலத்தில் விடவும் கடற்படையினரால் நீதிமன்றில் அனுமதி கோரப்பட்டது.

கடற்படையினரின் நகர்த்தல் பத்திரக் கோரிக்கை தொடர்பில் நீதிமன்றில் கருத்து வெளியிட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரி முழுமையாக உடைந்த 9 படகுகளையும் அழிப்பதற்கு இணக்கம் தெரிவித்தார். இருந்தபோதும் எஞ்சிய 9 படகுகளையும் ஏலத்தில் விடுவதற்குத் தமது திணைக்களப் பணிப்பாளர் ஒப்புதல் வழங்கவில்லை என்று குறிப்பிட்டார்.

எஞ்சிய 9 படகுகளையும் ஏலத்தில் விடுவது தொடர்பில் இந்தியத் தூதரகம் விரும்பவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது எனப் பதிலளித்தார்.

இவற்றினை ஆராய்ந்த நீதிபதி சிவகுமார் முழுமையாக உடைந்த நிலையில் உள்ள 9 ட்ரோலர்களை மட்டும் அழிப்பதற்கு அனுமதி வழங்கினார்.

## எதிரணியுடன் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கீழ் மட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி தீர்மானத்துக்கு வரவுள்ளோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, சிக்கல்களுக்கு மத்தியில் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் நேரடியாகத் தீர்மானம் எடுக்க முடியாமல் உள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி அலவத்துவல தெரிவித்துள்ளார்.

## மஹிந்தவுடன் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரணதண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா கடந்த ஜூன் 24ஆம் திகதி ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

மரணதண்டனை பெற்ற ஒருவருக்கு மன்னிப்பு வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவை வெளிநாடுகள் மற்றும் ஐ.நா. மற்றும் மனித உரிமை குழுக்கள் விமர்சித்திருந்தன. இது சட்டத்தின் ஆட்சியைக் குறை மதிப்புக்கு உட்படுத்துவதாக எச்சரித்திருந்தன.

## கட்டுத்துவக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையான வேலாயுதபிள்ளை கிருஷ்ணகுமார் (வயது 35) என்பவர் படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலைக்குக் எடுத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தடுப்பூசிகளால் 'எய்ட்ஸ்' பரவ எந்தவொரு வாய்ப்பும் இல்லை

## அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் தடுப்பூசிகளால் எயிட்ஸ் நோய் பரவுகின்றது எனப் பொய்யான பிரசாரம் செய்யப்படுகின்றது. தடுப்பூசிகளால் எய்ட்ஸ் பரவ எந்தவொரு வாய்ப்பும் இல்லை. தடுப்பூசிகள் இரத்த மாதிரிகளால் தயாரிக்கப்படுவதில்லை.

- இவ்வாறு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் பிரசன்ன குணசேகர தெரிவித்தார்.

-அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தடுப்பூசிகளில் எய்ட்ஸ் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனக் கூறுவதை முழுமையாக நிராகரிக்கின்றோம். அதேபோல் வேறு நோய்க்கான மருந்தொன்று இலங்கைக்கு இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்ட வேளையில் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

பின்னர் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஆய்வுகளுக்கு உட்படுத்தி அதனை நிராகரித்த பின்னர் மீண்டும் குறித்த மருந்தை இறக்குமதி செய்யத் தீர்மானம் எடுத்தோம்.

ஆகவே, இந்த மருந்துக்கும் தடுப்பூசிக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை.

கொரோனா வைரஸ் உலகளவில் பரவிக் கொண்டுள்ள நிலையில் இலங்கையில் இப்போதும் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டில் உள்ளது. தடுப்பூசி ஏற்றுகின்ற காரணத்தினாலேயே இந்த வேலைத்திட்டம் வெற்றியடைந்துள்ளது.

எனவே, மக்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும் என நாம் வலியுறுத்தி வருகின்ற நிலையில் தவறான கருத்துகளை பரப்பி மக்களை குழப்பும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது - என்றார்.

# இலவசக் கல்வியை இராணுவ மயப்படுத்த நாங்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் திட்டவட்டம்

இலவசக் கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அதற்கு எதிராகக் கல்விச் சமூகத்தின் போராட்டம் தொடரும். அத்துடன், பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் வேலு இந்திரச்செல்வன் தெரிவித்தார்.

10 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து நுவரெலியாவில் நேற்று மாலை நடத்திய கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களுக்கான இலவசக்கல்வி உரிமையைப் பாதுகாத்துக்கொள்வதற்காக நாம் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்திருக்கின்றோம். அந்தவகையில் இலவசக் கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்தும் அரசின் திட்டத்தையும் எதிர்க்கின்றோம்.

சேர் ஜோன் கொத்தலாவ பல்கலைக்கழகம் தொடர்பான சட்டமூலத்தை மீளப்பெறுமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது எமது சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தோழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கிய நிலையில்கூட அவர்களைப் பலவந்தமாக தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் நிலையத்தில் உரிய வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. எனவே, மாணவர்களின் கல்வி உரிமைக்காகக் களமாடியவர்களை உடனடியாக அரசு விடுவிக்க வேண்டும்.

இது ஜோசப் ஸ்டாலினுக்கான போராட்டம் மட்டும் அல்ல. இலங்கை வாழ் மாணவர்களுக்கான போராட்டமும் கூட. இலவசக் கல்வியைக் காக்க நாம் தொடர்ந்தும் போராடுவோம். இணையவழி கல்வியில் இருந்து விலகியுள்ளோம். நியாயம் கிடைக்கும் வரை அந்தப் போராட்டம் தொடரும் - என்றார்.

## இலங்கையில் 1,488 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,804 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 46 ஆயிரத்து 241 ஆக அதிகரித்துள்ளது.

## மேலும் 31 பேர் பலி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 533 ஆக அதிகரித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

## கோட்டாபயவின் வெற்றியில் ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் 'தாமரை மொட்டு' சின்னத்தில் போட்டியிட்டதாலேயே மக்களின் ஆதரவைப் பெற்றார்கள்' என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

மேற்படி விமர்சனத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவின் வெற்றியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பங்களிப்பும் உள்ளது. இதனைப் புரிந்துகொள்ளாமல், நன்றி மறந்து விமர்சிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாதிருந்திருந்தால் கண்டி மாவட்டத்தில்கூட 50 ஆயிரம் வாக்குகளால் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தோல்வியைச் சந்திக்க நேரிட்டிருக்கும் என்பதை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம போன்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆட்சியும் செய்கின்றது. அரசியலும் செய்கின்றது. ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இவ்விரண்டுமே இல்லாமல் போயுள்ளது. எனவே, என்னை எவரும் மௌனிக்க வைக்கமுடியாது. நான்தான் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளேன் - என்றார்.

# சீனா மற்றும் இந்தியா மோதுகின்ற போர்க்களமாக இலங்கை மாறுமா?

## சிறிநேசன் கேள்வி



சீனாவும், இந்தியாவும் போட்டி போடுகின்ற, மோதுகின்ற ஒரு போர்க்களமாக இலங்கை மாறப்போகிறதா என்ற கேள்வியும் எழுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டு ஊடக அமையத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில் –

சீனா தற்போது யாழ்ப்பாணம் வரை ஊடுருவி இருக்கிறது. பூநகரியில், கௌதாரிமுனையில் அவர்கள் இப்போது கடலட்டை வளர்க்கும் பண்ணையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது கூட அங்கிருக்கும் மக்களுக்குத் தெரியாமல் நடந்திருக்கிறது.

முறையான அனுமதிகள் கூட பெறப்படவில்லை. இப்படியெல்லாம் பார்க்கும் போது இன்று சீனா யாழ்ப்பாண குடாநாட்டுப் பக்கம் சென்றால் அடுத்த பக்கமாக இந்தியா இலங்கை மீது ஆத்திரமடையக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே அந்த நிலையில் பார்த்தால் அவர்கள் எங்களுக்கு அபிவிருத்தி என்கிற போர்வையில் வருகின்ற போது இந்தியா தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற நிலைமை வருகிறது.

எனவே சீனாவும் இந்தியாவும் போட்டி போடுகின்ற மோதுகின்ற ஒரு போர்க்களமாக இலங்கை மாறப்போகிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

இப்படியான செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் தவிர்த்து கொண்டு அயலில் உள்ள இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளுடன் சமநிலையான உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஓர் ஆலோசனையாக இருக்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

# மின்நிலைய பங்குகள் அமெ. நிறுவனத்துக்கு!

## உடன்படிக்கையும் கைச்சாத்து

இலங்கை திறைசேரிக்குச் சொந்தமான 300 மெகா வாட் உற்பத்தியை மேற்கொள்ளக் கூடிய கெரவலபிட்டிய 'யுகதானவி' மின் நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்யும் உடன்படிக்கையில் இலங்கையின் நிதி அமைச்சு கையெழுத்திட்டுள்ளது.

முன்னதாக இந்த மின்நிலையத்தின் 51 சதவீதத் திற்கு பங்கு விற்பனை செய்யப்படவுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் 40 வீதப்பங்குகளை விற்பனை செய்யும் உடன்படிக்கையே கையெழுத்தாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டமையை அமெரிக்க நிறுவனமும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த உடன்படிக்கையின் படி, அமெரிக்காவை தளமாகக் கொண்ட 'நியூ போர்ட்ரெஸ் எனர்ஜி' நிறுவனம் (என்.எஃப்.இ) இற்கு எதிர்காலத்தில் மிதக்கும் சேமிப்பு மறுசீரமைப்பு பிரிவு, மற்றும் டீசல் மின்சக்தி நிலையங்களுக்கு திரவ இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி.) வழங்குவதற்கான குழாய் ஆகியவற்றை நிர்மாணிக்கும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், அனைத்து (எல்.என்.ஜி.) திரவ வாயு மின் உற்பத்தி நிலையங்களுக்கும் ஐந்து ஆண்டுகளாக எரிவாயு வழங்குவதற்கான உரிமையை அரசாங்கம் அமெரிக்க நிறுவனத்துக்கு (என்.எஃப்.) வழங்கியுள்ளது.

இதேவேளை இந்த உடன்படிக்கை இலங்கைக்கு தீங்கு விளைவிக்கும் என்று கூறி, இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்றில் இருந்து ஆயிரத்து 804 பேர் குணமடைவு

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் ஆயிரத்து 804 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (திங்கட்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 46 ஆயிரத்து 241 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 74 ஆயிரத்து 538 ஆக அதிகரித்துள்ளது. இதேநேரம், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 502 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் கின்னஸ் சாதனை படைத்த இலங்கை மாணவன்



கும்மிடிபூண்டியிலுள்ள இலங்கைத்தமிழர் அகதிகள் முகாமில் வசித்து வருகின்ற தமிழ் மாணவன் டிம்பாசனம் மூலம் ஒரு நிமிடத்தில் 34 பலூன்களை உடைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இவ்வாறு சாதனை படைத்தவர் பதினாறு வயதான ரஞ்சன் திவேஸ் என்ற மாணவனாவார்.

உக்கிரனைச் சேர்ந்த இளம்பெண் குருடாஸ் ருசியானா என்பவர் டிம்பாசனம் மூலம் பின்புறமாக ஒரு நிமிடத்தில் 24 பலூன்களை உடைத்து கின்னஸ் சாதனையில் இடம் பிடித்துள்ளார்.

இதனை முறியடித்துக் குறித்த சிறுவன் ஒரு நிமிடத்தில் பின்புறமாக 34 பலூன்களை உடைத்து சாதனை படைத்துள்ளார்.

ஐந்து வருட யோகாப் பயிற்சியின் விளைவாக இவர் இந்த சாதனையை எட்டியுள்ளார்.

# 14 வயதுடைய சிறுமி மீது பாலியல் வன்கொடுமை

## இளைஞன் மறியலில்

தனது 14 வயது மைத்துனியை பாலியல் பலாத்காரம் செய்தார் எனத் தெரிவித்து கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 37 வயது நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் முதிதா விதானபத்திரண தெரிவித்துள்ளார்.

சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் சந்தேகநபர் ஜூலை 23 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# காணிகள் அபகரிப்பு; வெடிக்கும் போராட்டம்

## எச்சரிக்கிறார் ரவிகரன்



முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட வட்டுவாகல் கிராமத்தில் 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை கடற்படை முகாமிற்காக அபகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு தமிழ் மக்களின் காணிகளை கடற்படை முகாமிற்காக அபகரித்தால் மக்களோடு இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்குவோம் என வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள தமிழ் மக்களுக்குரிய 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை கடந்த 2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றுக்கு அமைவாகக் கடற்படையினருக்கு அபகரிப்புச் செய்வதற்கு ஏற்கனவே கடந்த 2018ஆம் ஆண்டிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இருப்பினும் அப்போது இந்த அபகரிப்பு முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணிகளுக்குரிய தமிழ் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

அதனடிப்படையில் அப்போது அந்த ஆக்கிரமிப்பு முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன. அதேவேளை அவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டமையுடன், அதுதொடர்பானவழக்குவிசாரணைகள் மூன்று வருடங்களைக் கடந்து தற்போதும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவஜீவன் 08.07.2021ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் மீண்டும் காணிகளை அளவீடுசெய்து கடற்படைக்கு அபகரிக்க இருப்பதாக காணிகளுக்குரிய தமிழ் மக்களுக்கு அறிவித்தல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் குறித்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

# தொற்று வந்து குணமடைந்தவர்கள் 14 நாள்களின் பின் தடுப்பூசி பெறலாம்

கொழும்பு, ஜூலை, 13

கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்த நோயாளர்கள் குணமடைந்து 14 நாள்களின் பின்னர் தடுப்பூசியை பெறுவது உகந்ததாகும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, தேவையற்ற முறையில் அச்சமடையத் தேவையில்லை என விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நோயாளர் ஒருவர் குணமடைந்து வீடு திரும்பியதன் பின்னர், அன்று முதல் 14 நாள்களுக்குப் பின்னர் தாமதிக்காமல் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ராஜபக்ஷ குடும்ப நிறுவனமாக மாறிவருகிறது இலங்கை அரசு

## நியூயோர்க் டைம்ஸ் சுட்டிக்காட்டு

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் ராஜபக்ஷ குடும்பத்தின் நிறுவனமாக மாறி வருவதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவின் மூன்று சகோதரர்கள் அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்து வருகின்றனர் எனவும் அவர்களின் புதல்வர்களுக்கும் அதிகாரமிக்க பதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதியமைச்சராக பஸில் ராஜபக்ஷ பதவியேற்றுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை இது, குடும்ப ஆட்சியை உறுதிப்படுத்தும் நடவடிக்கை எனவும் கூறியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் ஜனாதிபதியாக பதவி வகிப்பதுடன் அவரது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவி வகித்து வருகிறார். மேலும் மற்றுமொரு சகோதரரான சமல் ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் அமைச்சர்களாக பதவி வகித்து வருகின்றனர்.

சமல் ராஜபக்ஷவின் புதல்வர் சீந்திர ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சராக பதவிவகித்துவருகிறார். இந்நிலையில், அண்மையில் அமெரிக்காவில் இருந்து திரும்பிய பஸில் ராஜபக்ஷ, நாட்டின் மிக முக்கிய அமைச்சுப்பதவிகளில் ஒன்றான நிதியமைச்சு பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இவர்களை தவிர ராஜபக்ஷ சகோதரர்களில் தங்கையின் புதல்வரான நிபுண ரணவக்க நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து வருகிறார். இலங்கையின் அரச துறையில் உள்ள நிறுவனங்களில் கிட்டத்தட்ட 80 வீதமான நிறுவனங்கள் ராஜபக்ஷ குடும்பத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன என நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சீன ஆக்கிரமிப்பை எதிர்ப்போம்!

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூட்டமைப்பைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் முக்கிய கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கின்றார். முழு ஈழத் தமிழினமும் இன்று கேட்க வேண்டிய கேள்வி இது.

சீனாவும் இந்தியாவும் போட்டி போடுகின்ற – பலப் பரீட்சை செய்யப் போகின்ற – தளமாக இலங்கை மாறப்போகின்றதா என்று அவர் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

உண்மையில், இலங்கை அல்ல, தமிழர் தாயகப் பிரதேசம், தமிழர்களின் பூர்விக வாழிடமான வடக்கும், கிழக்கும் இந்த மோதலுக்கான தளமாக மாறி வருகின்றதா என்பதுதான் கேள்வியாகும்.

சீனா இப்போது யாழ்ப்பாணம் வரை ஊடுருவியிருக்கின்றதா என்று அவர் கேள்வி எழுப்புகின்றார்.

ஆனால், உண்மை நிலைவரம் – களயதார்த்தம் – இதையும் தாண்டியிருக்குமோ என்ற சந்தேகம் பலருக்கும் உண்டு.

யாழ்ப்பாணம் அல்ல, அதையும் தாண்டி இந்தியாவின் தென் முனையை ஒட்டி நிற்கும் யாழ்ப்பாணத்தின் வடக்குத் தீவுகள் வரை சீனச் செல்வாக்கு நிலை நிறுத்தப்பட்டிருக்கலாம் என்பதற்கான ஏது நிலைகள் தென்படுகின்றன.

அமெரிக்க – சோவியத் பனிப் போர் முடிவுக்கு வந்து புதிய உலக செல்நெறி கட்டவிழ்கின்றது.

முதலாளித்துவம் – கம்யூனிஸம் என்ற பழைய மோதல் போக்கு இப்போது முழு அளவில் மாறிவிட்டது.

உலகப் பேரரசுகள் இரு கன்னைகளாய்ப் பிரிந்து நின்று போட்டியிடுவதும், மோதுவதும் பழைய நிலைமைதான் என்றாலும் இப்போது போட்டிக்களம் வேறு; போட்டிகள் வேறு; போட்டியிடும் தரப்புகள் வேறு; தந்திரோபாயங்கள் வேறு; அவற்றை அடைவதற்காகத் தரப்புகள் கட்டவிழ்க்கும் மூலோபயங்களும் வேறு. ஆட்டத் தரப்புகளும் அவை சேர்ந்திருக்கும் அணிகளும் கூட வேறுதான்.

முன்பொரு காலத்தில் இந்தியா, சோவியத் யூனியன் பக்கம் – அமெரிக்காவுக்கு எதிரான தரப்பில் – அணி சேர்ந்திருந்தது.

இப்போது பனிப் போர் கம்யூனிஸ – முதலாளித்துவ அணிகள் இடையே அல்ல. பொருளாதார ரீதியான போட்டித்தான் இப்போதைய பனிப்போருக்கு அடிப்படை.

உலகின் மிகப் பெரும் பொருளாதாரக் கட்டமைப்பை வைத்திருப்பது சீனா. அமெரிக்காவையும் விஞ்சி நிற்கின்றது. தனது பொருளாதாரத்தின் கால்களை உலக்கெங்கும் அது வலுவாக ஊன்றி, விஸ்தரித்து, வியாபித்து வருகின்றது. அதன் மூலம் உலகை ஆட்டிப்படைக்கும் பேரரசாக அது மாறி வருகின்றது.

அது அந்த நாட்டின் எல்லைப்புற முரணிலை நாடான இந்தியாவுக்கும், இதுவரை காலமும் உலகப் பொருளாதாரம் தன் கைகளிலேயே என்று மார்தட்டி வரும் அமெரிக்காவுக்கும் அச்சுறுத்தலாக மாறிவருகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை பொருளாதார ரீதியில் மட்டுமல்லாமல், பாதுகாப்பு ரீதியிலும் சீனா பெரும் அச்சுறுத்தல் சக்தியாக மாறிவருவது கண்கூடு.

இந்திய பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் இந்தப் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் நான்கும் தமக்குள் ‘குவாட்’ என்ற அமைப்பை நிறுவிக் கூட்டாகச் செயற்பட்டு வருகின்றன.

இந்தியாவை ஒரு புறத்தில் எல்லையாகக் கொண்ட சீனா அந்த எல்லையூடாக இந்தியாவுக்கு அச்சுறுத்தல் கொடுத்து வந்த நிலைமையைத் தாண்டி, இந்தியாவின் சகல எல்லைப் புறங்களிலும் உள்ள அயல் நாடுகளில் எல்லாம் கால் பதித்து அங்கிருந்தும் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஆபத்தை ஏற்படுத்தும் முனைப்பில் காய் நகர்த்தி வருகின்றது.

பொருளாதாரத்தில் திண்டாடித் துவண்டு கிடக்கும் இலங்கைக்கு அதிலிருந்து மீள்வதற்கான உதவித் திட்டம் என்ற பெயரில் மேலும் மேலும் கடன் உதவிகளை வழங்கி அந்தக் கடன் திட்ட வலையில் இலங்கை அரசை மாட்டிவிட்டுள்ளது.

கடன் வழங்கல் மூலமான தனது செல்வாக்கு வாயிலாக சீனா இலங்கையில் அகலக் கால் பரப்பியிருக்கின்றமை சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட விடயம்.

அந்த அகலக் கால் பரப்பலை இப்போது வடக்கு, கிழக்கிலும் சீனா விஸ்தரித்து வருகின்றது என்பதுதான் பிந்திய நிலைமையாகும்.

சரியோ, பிழையோ ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை தாயகத் தமிழரும், பாரதமும் நமது தொப்புள் கொடி உறவுகள். பாரதத்துக்கு எதிரான எதிர்வினைகளை ஆற்றுவதற்கான தளமாக – அதுவும் பாரதத்துக்கு எதிரியான அந்நியதேசம் நமது தாய் மண்ணைக் களமாக – பயன்படுத்த நாம் அனுமதிக்க முடியாது; அனுமதிக்கக் கூடாது.

மெத்தனப் போக்கைக் காட்டாது – நமக்குள் பிரிந்துபட்டு நிற்காமல் – இந்த விவகாரத்தை நாம் ஒன்றுபட்டு எதிர்த்து, சீன ஆக்கிரமிப்பு முயற்சியை முறியடிக்க வேண்டும்.

# தற்போதைய அமைச்சரவை சட்டவிரோதமாக அமைந்தது

## ஓமல்பே சோபித தேரர் எச்சரிக்கை



தற்போதைய அமைச்சரவை சட்டவிரோதமானது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எம்பிலிபிட்டியில் ஊடகவியலாளர்களிடம் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் தலைமையிலான அமைச்சரவை சட்டவிரோதமானது எனவும் அரசியல் சாசனம் மீறப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் சாசனத்தின் 20 ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு சூழ்ச்சித்திட்டமா என்ற சந்தேகம் எழுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல சட்டத்தரணியான நீதி அமைச்சருக்கு இந்த விடயம் புரியாமல் இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தாது இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் உடன் தீர்வு வழங்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்கள் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகள் தொடர்பிலும் சர்ச்சைகள் எழக்கூடிய அபாயம் காணப்படுவதாக சோபித தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# சிறுவர்களின் எதிர்காலத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கும்

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உத்தரவாதம்



பொருளாதாரத்தில் பின்னடைவுகள் இருந்தாலும் சிறுவர்களின் எதிர்காலத்துக்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், கொரோனாத் தொற்றால் கடந்த சில மாதங்களாக அரசாங்கம் 28,600 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது என கூறினார்.

சுற்றுலாத்துறையிலிருந்து 400 முதல் 500 கோடி ரூபா வரையும் ஆடைத்துறையிலிருந்து 170 கோடியும் என அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேநேரம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் தங்களது பரீட்சை மற்றும் தங்களின் எதிர்காலம் தொடர்பில் மாணவர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இந்த சுமைகள் அனைத்தும், சிறுவர்களின் கல்விக்குத் தடையாக இருக்க அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

# பழைய போகம்பறை சிறைச்சாலையில் கடமையிலிருந்த காவலர் பணி நீக்கம்

பழைய போகம்பறை சிறைச்சாலையில் கடமையில் இருந்த சிறைக் காவலர் ஒருவர், தனிமைப்படுத்தலுக்காக அனுப்பப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து ஈசி கேஷ் மூலம் பணம் பெற்றமை தொடர்பில் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.


சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏகநாயக்கவின் தகவல்படி, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் சிறைவாசம் அனுபவிப்பதற்காக அனுப்பப்பட முன்னர் பழைய போகம்பறை சிறைக்குத் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பப்படுகிறார்கள்.

இந்த நிலையில் சிறைச்சாலையில் உள்ள ஒரு காவலர். சந்தேகநபர்களுக்கு பல்வேறு வசதிகளை வழங்குவதாக உறுதியளித்து அவர்களிடமிருந்து ஈசி கேஷ் மூலம் பணம் பெமை தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணையின் போது காவலர் மூன்று சந்தேகநபர்களிடமிருந்து 9 ஆயிரம் ரூபா பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்தே சிறைச்சாலை தலைமையகம் அவரை உடனடியாக பணி இடை நீக்கம் செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் நட்டஈடு வழங்க ஆலோசனைக் கூட்டம்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான முதற்கட்ட நஷ்டஈட்டை வழங்கும் செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு வழங்கினார்.

கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் துறைசார் பணிப்பாளர்களுடனான மீளாய்வுக் கலந்துரையாடலின் போதே மேற்குறித்த விடயம் ஆராயப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில், நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற களப்பு அபிவிருத்தி, வி.எம்.எஸ். கருவிகளைப் பொருத்துவதற்கான முதற்கட்டப் பயனாளர் தெரிவு உட்பட அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பாக கேட்டறிந்த கடற்றொழில் அமைச்சர் வேலைத்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

**அங்கம் 12**

**ந.வித்தியாதரன்**

குட்டிமணி, ஜெகன், கறுப்பன் ஆகியோருக்கு எதிரான கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கு மூன்று மொழிகளிலும் ஒரே சமயத்தில் நடைபெற்றது என்பதைக் குறிப்பிட்டிருந்தேன்.

சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் கூறப்படுபவற்றைத் தமிழில் மொழிபெயர்ப்பதும், தமிழில் மொழிபெயர்ப்பவற்றை சுருக்கெழுத்தில் பதிந்து, பின்னர் தட்டச்சு செய்து, சட்டரீதியான ஆவணப் பதிவு செய்வதும் அதற்கான ஆளணிப் பற்றாக்குறையால் நெருக்கடிகளைச் சந்தித்து. இதற்கான ஆளணியை வடக்கு நீதிமன்றங்களில் இருந்து விசேடமாகத் தருவிக்க வேண்டியிருந்தது.

ஒரு நாள் முழுவதும் நடைபெறும் சாட்சிய மற்றும் வாதப் பதிவுகளை சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்து, தட்டச்சு செய்வதற்கு குறைந்தது மூன்று பேராவது – ஆளணியினராவது – தேவைப்பட்டனர். வழக்கு சமயத்தில் அவர்கள் மாறி மாறிக் குறிப்பெடுப்பர். பின்னர் இரவு வரை நின்றோ அல்லது சனி, ஞாயிறு மற்றும் நீதி மன்ற விடுமுறை தினங்களில் பணி செய்தோதான் அவற்றை தட்டச்சுச் செய்வர்.

அவர்களின் வரவை உறுதிப்படுத்தித்தான் வழக்கு விசாரணை திகதியிடப்படும். வழக்குத் தினங்களைத் தீர்மானிப்பதில் சிரேஷ்ட சட்டத்தரணிகளினதும், நீதிபதியினதும் வசதியான தினங்களுக்குரிய முன்னுரிமை இந்த ஆளணியினரின் வசதிக்கு அடுத்துத்தான்.

இந்த வகையில் யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஒருவரும் தமிழ் சுருக்கெழுத்துத் தட்டச்சுப் பணியாளராக கடமைக்கு சமுகம் தந்தார். நீதிமன்றப் பரிச்சயம் நட்புறவாக மாறியது. வெள்ளவத்தையில் சந்திக்கும்போது குசலம் விசாரித்து, ஒரு தேநீர் கடையில் அமர்ந்து டீ குடித்து உரையாடும் அளவுக்கு வளர்ந்திருந்தது. வழக்கு முடிந்து புறக்கோட்டைப் பக்கம் போக வேண்டியிருந்தால், என்னுடன் வந்து ஒண்டி, அதன் மூலம் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.சிவசிதம்பரத்தின் ஜீப்பில் ஏறி எங்கள் அலுவலகம் வரை வந்திறங்கும் அளவுக்கு பழக்கம் முன்னேறியது.

கான்ஸ்டபிள் சிவநேசன் வழக்கு விசாரணை முடிவுற்று தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் ஒரு வியாழக்கிழமை பிற்பகலில் வெள்ளவத்தை காலி வீதி பேமண்டில் அகமத்தாக அவரைச் சந்தித்தேன். வழக்கு விசாரணை நடக்காத காலத்தில் அவர் ஏன் கொழும்பில் நிற்கின்றார் என எனக்குள் கேள்வி எழுந்தது. நோண்டினேன்.

"சிவநேசன் கொலை வழக்கு விசாரணைத் தீர்ப்பு நாளை. அதன் தமிழ் பிரதியை மொழி பெயர்த்துத் தட்டச்சுச் செய்யவே மூன்று நாள்கள் முன்னதாக வந்



நாத்திகரான திராவிட கழகத் தலைவர் கி.வீரமணியால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படும் எஸ்.டி.சிவநாயகம்.

தேன். இன்று காலைதான் வேலை முடிந்தது. எல்லாம் முடிந்து கோவைகளை நீதிபதியிடம் ஒப்படைத்து விட்டோம். நாளை தீர்ப்பின் போதும் பதிவு வேலை இருக்கும். அது முடிந்ததும் இரவு மெயிலில் யாழ் புறப்பட்டு விடுவேன்." – என்று ஏதோ பெரும் சுமையை இறக்கி வைப்பவர் போல புலம்பினார்.

பக்கத்தில் இருந்த தேநீர் கடைக்குக் கூட்டிச் சென்றேன். இலாவகமாகப் பேசி இறுதித் தீர்ப்பு என்ன என்று கேட்டேன்.

சுற்றும் முற்றும் பார்த்து விட்டு மெல்லச் சொன்னார்.

"யாரிடமும் சொல்லாதீர்கள். குட்டிமணிக்கும், ஜெகனுக்கும் மரணதண்டனைத் தீர்ப்பு. கறுப்பன் விடுதலை. வழக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டாலும் மூலக் குற்றப்பத்திரம் தண்டனைச் சட்டக் கோவையின்படி தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், அதன் கீழ்தான் தண்டனை வழங்க முடியும். இது தொடர்பில் நாடாளுமன்ற உரைகளை தாம் கவனத்தில் எடுக்க முடியாது. அது தம்மைக் கட்டுப்படுத்தாது. அதனடிப்படையில் தீர்ப்பு வழங்க முடியாது. எதிரிகள் தரப்பு வாதத்தில் தார்மீக நியாயம் இருந்தாலும் எனது கைகள் சட்டத்தினால் கட்டுப் பட்டுள்ளன என்ற கருத்தை நீதிபதி தம் தீர்ப்பில் முன்வைத்துள்ளார்" என்று என் நண்பர் விளக்கினார்.

அவரது பெயர், விவரத்தை நான் குறிப்பிடவில்லை ஓரிரு வருடங்களுக்கு முன்னர் அவரை யாழ்ப்பாணத்தில் கண்டேன். அவர் சேவையிலிருந்து முற்கூட்டியே ஓய்வு பெற்று பல வருடங்களாகி விட்டன என்றார். இப்போதுதான் இவ்விடயத்தில் என் செய்தி மூலத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கிறேன். இப்போது அதனை வெளிப்படுத்துவதைக் கூட அந்த முன்னாள் அரச ஊழியர் விரும்பமாட்டார். அவருக்கு 39 ஆண்டுகள் கடந்து இந்த விடயம் நினைவில் இருக்குமோ, என்னவோ?

செய்திப் பரிவர்த்தனை தொடர்பான தார்மீகத்தில் இது தப்பு. என்றாலும் வாசகர்களுக்கு அக் காலப் போக்கை விளக்குவதற்கு விவரத்தை எடுத்துரைத்தேன்.



சத்திய சாயி பாபாவினால் அரவணைக்கப்பட்ட பக்தர்களான எஸ்.டி.எஸ். தம்பதியினர்.

எஸ்.டி.எஸ். சிவநாயகம் ஐயா இப்போது இருந்திருந்தால் இதனை – செய்தி மூலத்தை நான் கோடி காட்டியமையை – நிச்சயம் கண்டிருப்பார்.

செய்தியாளனாக ஊடகத்துறையில் சேர்ந்த எங்களுக்கு அத்துறையின் ஆனா, ஆவன்னா என்று அகர எழுத்துப் போல அவர் முதலில் போதித்த – அல்லது தாம் முன்மாதிரியாக நடந்தமை மூலம் எங்க ளுக்கு உணர்த்திய – விடயம் அதுதான்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் – எந்த நெருக்குவாரத்திலும் – எந்த இக் கட்டிலும் – தலைபோகும் ஆபத்து நேர்ந்தாலும் கூட – எங்களின் செய்தி மூலத்தைக் காட்டிக் கொடுக்கவே கூடாது என்பதுதான். திரும்பத் திரும்ப அதனைச் சொல்லிலும் செயலிலும் எமக்கு அவர் ஒவ்வொரு கணமும் உணர்த்தினார்.

அந்தப் பண்பியல்பை – ஊடகக் கடப்பாட்டை – என்னுடைய நாற்பது வருடங்களுக்கும் அதிகமான ஊடக வாழ்வியலில் ஒரு கணம் கூட நான் தவற விட்ட வனல்லன் என்ற உறுதியுரையை அந்த ஜாம்பவானின் சிஷ்யன் என்ற பெருமையோடு கூறுவேன்.

என்னுடன் இதுவரை காலமும் பணியாற்றிய பல நூற்றுக்கணக்கான சக ஊடகவியலாளர்களைக் கேட்டால் இதனை உறுதிப்படுத்துவார்கள்.

இந்த வலிமையான பணிக் கடப்பாட்டை என் மனதில் ஆணித்தரமாகப் புகுத்தியவர் சிவநாயகம் ஐயாதான். அவரிடம் பயிலச் சென்றதால் மட்டுமே 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பது போல இன்று வரை அந்த நிலைப்பாடு – பண்பியல்பு – போக்கு – என் மனதில் உறுதியாகப் பதிந்துள்ளது. இந்தக் கணம் வரை நான் அதைத் தவறாது கடைப்பிடித்தும் வருகிறேன். யுத்த அழுத்தங்கள் நெருக்கடிகள் மத்தியிலும் கூட நான் அதனைக் கிஞ்சித்தும் தவற விடவில்லை என்று அடித்துக் கூறுவேன்.

"என் எழுத்தாயுதம்' என்ற என் நூலிலும் அதனை நான் பின்வருமாறு குறிப்பிட்டேன்:–

*பெரும்பாலும் யுத்தக் கொடூரம் அல்லது இனப் பிணக்கின் விளைவான அதீத அச்சுறுத்தல்கள் ஆகியவற்றுக்கு மத்தியிலேயே எனது பத்திரிகை ஆசிரியப் பணி கட்டவிழ்ந்தது. இந்தச் சமயங்களில் எனது பத்திரிகைகளில் வெளியான அனேகமாக அனைத்து செய்திகளுக்குமே செய்தி எழுதியவரின் பெயரை நான் வெளியிடுவதேயில்லை. சர்ச்சைக்குரிய கட்டுரைகளாயின் அவை கூட புனை பெயரில் பிரசுரமாகும். இந்தக் காரணத்தினால் சம்பந்தப்பட்ட செய்தியாளனின் அல்லது கட்டுரையாளனின் பெயர், புகழ், திறமை பற்றிய பொதுக்கருத்து என்பன மேலோங்கி விடாமல் நான் தடுத்து வந்திருக்கிறேன் என்ற குற்றச்சாட்டு சில தரப்புகளில் இருந்து அவ்வப்போது வெளிவராமல் இருந்ததில்லை.*

*ஆனால் நான் அப்படிச் செய்தமைக்கு ஒரு காரணம் இருந்தது. அந்தச் செய்திகளினால் அல்லது கட்டுரைகளினால் எனக்குக் கீழ் பணியாற்றும் யாருக்குமே ஆபத்து வந்து விடக்கூடாது என்பதுதான் எனது உறுதியான நிலைப்பாடு.*

*கஷ்டமோ நெருக்கடியோ – பாராட்டோ தூற்றுதலோ – அச்சுறுத்தலோ அரவணைப்போ – எதுவாகிலும் சம்பந்தப்பட்டவரை நெருங்காமல் எல்லாவற்றுக்கும் நானே பொறுப்பேற்றுக் கொண்டேன்.*

*தவறான செய்திகளுக்காக – அல்லது செய்திகளின் விளைவுக்காக – எந்தப் பாதிப்பும் சம்பந்தப்பட்ட செய்தியாளரை நேரடியாக நெருங்காத வகையில் நான் எப்போதும் அவர்களின் கவசமாக இருந்துகொண்டேன்.*

*நிர்வாக விடயங்கள் தவிர்ந்து செய்தியின் உண்மைத் தன்மை தொடர்பாக எனது நிறுவனத்தின் நிர்வாகம் கூட எனது ஆசிரியர் பீட ஊழியர்கள் மீது தலையிடாத வகையில் நான் பார்த்துக்கொண்டேன்.*

*ஒரு செய்தியின் உண்மைத் தன்மை, அது தொடர்பான அம்சங்கள் ஆகியன தொடர்பில் அந்தச் செய்தியை வரைந்த செய்தியாளரையோ அல்லது அதனைப் பிரசுரத்துக்கு அங்கீகரித்த உதவி ஆசிரியரையோ அல்லது செய்தி ஆசிரியரையோ நான் எனது அறைக்கு அழைத்துக் கடிந்துகொள்வேன். காட்டமான வசனத்தில் பேசுவேன். அது சகஜம். ஆனால் எனது நிர்வாகத்தின் தலைமையோ அல்லது வெளியாள்களோ அல்லது இயக்கங்கள், அதிகாரத் தரப்பினர், காவல் துறையினர், படையினர் என இன்னோரன்ன பிறதரப்பினரோ அவர்களுடன் தொடர்பு கொள்ளவோ அல்லது நெருக்குதல் கொடுக்கவோ எச்சந்தர்ப்பத்திலும் நான் இடமளித்தவனேயல்லன்.*

*அத்தரப்பினர் எல்லோருக்கும் எனது பதில் ஒன்றுதான். பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் எனது பத்திரிகையில் வெளியான ஒவ்வொரு வரிக்கும் நானே பொறுப்பு; நான் மட்டுமே பொறுப்பு என்பதுதான்.*

*எனக்குக் கீழ் பணியாற்றிய பலநூறு செய்தியாளர்களை நீங்கள் கேட்டுப் பார்க்கலாம். எந்தச் சந்தர்ப்பத்திலும் எனது செய்தியாளர்களையோ, ஆசிரிய பீட சகாக்களையோ நான் காட்டிக் கொடுத்தவனல்லன். எல்லாச் செய்திகளுக்கும் தார்மீக அடிப்படையில் நானே பொறுப்பேற்று அத்தனை நெருக்கடிகளுக்கும் சளைக்காது நானே முகம்கொடுத்து வந்திருக்கிறேன். இந்த இருபத்தியைந்து வருட யுத்த காலப் பத்திரிகை ஆசிரியப் பணியில் எனது நெஞ்சறிய என் ஊழியர்கள் யாரையும் நான் காட்டிக் கொடுக்கவேயில்லை என்று நெஞ்சுரத்துடன் உறுதிபட கூறுவேன். அதனால் வந்த ஆபத்தின் விளைவுகளை ஏற்க நான் தயங்கியவனும் அல்லன்.*

*எமது பத்திரிகையில் எந்தச் செய்தி வந்தாலும் செல்லும் செல்லாததற்கெல்லாம் செட்டியாரே பொறுப்பு' என்றமாதிரி 'வித்தியாதரனே அவை எல்லாவற்றுக்கும் பொறுப்பு' என்று எல்லோரும் கருதும் ஒரு நிலைமையையே நான் பேணினேன். 'எங்கள் ஆசிரியர் என்னநெருக்கடி வந்தாலும் எங்களைக் காட்டிக் கொடுக்காமல் தாமே அவற்றை எதிர் கொள்வார். எங்களுக்குக் காப்பரணாக இருப்பார்' என்ற நம்பிக்கையை எனது ஆசிரிய பீடத்தவர்கள் மத்தியில் நான் எப்போதும் வளர்த்துக் கொண்டேன்.*

– 2010 வரையான என் அனுபவத்தை இப்படி அந்த நூலில் விவரித்துள்ளேன்.

கான்ஸ்டபிள் சிவநேசன் வழக்குத் தீர்ப்பு நேரத்துடன் எனக்குக் கிட்டிய தகவலை செய்தி மூலத்தை வெளிப்படையாக அடையாளப்படுத்தாமலேயே வெளிப்படுத்தியுள்ளேன் – ஊடகவியல் தார்மீகக் கோட்பாட்டுக்கும் கடப்பாட்டுக்கும் அமைய.

இனி அந்த வழக்கை ஒட்டி நான் சில நெருக்கடிகளில் சிக்கிய சமயம் ஐயாவின் ஆலோசனையும் வழிகாட்டலும் எப்படி என்னை மீட்டன என்பதை நாளை விவரிப்பேன். **(வளரும்)**

காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | விஞ்ஞானம் | அலகு 09

## ஒளி

(நேற்றைய தொடர்ச்சி)

**தளவாடிகள் பயன்படும் சந்தர்ப்பங்கள்**

* முகம் பார்க்கும் கண்ணாடியாக
* திரைப்படப் பிடிப்பின் போது பொருட்களை ஒளியூட்ட

17. ........................................................
18. ........................................................
19. ........................................................
20. பல்விம்பங்கள் பயன்படும் சந்தர்ப்பத்திற்கு உதாரணமாக ........................ (கலையுருக் காட்டி / சூள்காட்டி) கூறலாம்.
21. தளவாடியின் ஒளித்தெறிப்பைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கருவி ........................(கலையுருக் காட்டி / சூள்காட்டி) ஆகும்.

**சூள்காட்டி பயன்படும் சந்தர்ப்பங்கள்**


* நீர்மூழ்கிக் கப்பல்களில்
* யுத்த தாங்கிகளில்

22. ..............................
23. ..............................
24. ..............................


**9.3 வளைவாடிகளில் தோன்றும் விம்பங்கள்**

* வளைவாடிகள் இரு வகைப்படும்.
    1. குழிவாடி
    2. குவிவாடி


கீழே தரப்படும் படங்களினை அவதானித்து இடைவெளிகளுக்கு பொருத்தமான சொற்களை எழுதுக.





1. குழிவாடியின் தெறிமேற்பரப்பு ............ ஆகவும், குவிவாடியின் தெறிமேற்பரப்பு .................... ஆக வும் காணப்படும்.




2. ஒளிக்கதிர் .................... கோட்டினாலும் அதன் .................... அம்புக்குறியினாலும் காட்டப்படும்.
3. பல ஒளிக்கதிர்கள் ஒன்றுசேர்ந்து .................... உருவாகும்.





4. .................... ஒளிக்கற்றை குழிவாடியின் முன்னால் ஓரிடத்தில் ஒருங்குகின்றது.
5. .................... ஒளிக்கதிர்களை ஒருங்கச் செய்யும் ஆடி ஆகும்.



6. ஆடி ஒன்றின் மீது .................... ஒளிக்கற்றைகள் விழும் போது ஒளிக்கற்றையானது .................... செல்கின்றது.
7. ஒளிக்கற்றையை விரிக்கப் பயன்படும் ஆடி .................... ஆகும்.

**குழிவாடியில் தோன்றும் விம்பங்கள்**




| மெழுகுதிரி வைக்கப்பட்ட இடம் | திரையில் பெறமுடியும்/ முடியாது | நிமிர்ந்தது / தலைகீழானது | விம்பத்தின் அளவு |
|---|---|---|---|
| A | பெறமுடியாது | நிமிர்ந்தது | பொருளை விடப் பெரியது |
| B | பெறமுடியும் | தலைகீழானது | 8. ............................ |
| B | 9. ................ | .................. | பொருளளவானது |
| D | 10. ................ | .................. | ............................ |


* பொருளானது குழிவாடியில் இருந்து விலத்திச் செல்கையில் விம்பமானது உருச்சிறுத்துச் செல்லும்.

**குழிவாடி பயன்படும் சந்தர்ப்பங்கள்**

* சவர ஆடியாக
* தெறிப்புத் தொலைகாட்டிகளில்

11. ................................
12. ................................
13. ................................

**குவிவாடியில் தோன்றும் விம்பங்கள்**




| மெழுகுதிரி வைக்கப்பட்ட இடம் | திரையில் பெறமுடியும்/ முடியாது | நிமிர்ந்தது / தலைகீழானது | விம்பத்தின் அளவு |
|---|---|---|---|
| A | பெறமுடியாது | நிமிர்ந்தது | பொருளை விட சிறியது |
| B | ................ | நிமிர்ந்தது | ............................ |
| C | பெறமுடியாது | ................. | ......................... |

* குவிவாடியின் முன்னால் எத்தானத்தில் பொருள் வைக்கப்பட்டாலும் உருச்சிறுத்த தலைநிமிர்ந்த மாய விம்பமே பெறப்படும்.

**குவிவாடி பயன்படும் சந்தர்ப்பங்கள்**

16. ..................................

* குழிவாடி, குவிவாடிகளுக்குப் பதிலாக ஆய்வுகூடப் பரிசோதனைகளில் விம்பங்களை அவதானிக்க கடிகாரக் கண்ணாடி பயன்படும்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | விஞ்ஞானம் | அலகு 09

## ஒளி - விடைகள்

**9.1 நிழல் உண்டாதல்**

1) A
2) ஒளி நன்கு ஊடுருவியமை
3) B
4) C
5) ஒளி செல்லாமை
6) சூரிய ஒளிபடும் அளவு, திசைக் கேற்ப.
7) நேரம்
8) சூரிய தட்டு
9) ஒளி செல்லும் பாதையில் தடை ஏற்படல்
10) நிறைவணுகு நிழல்
11) சிவப்பு நிறத்தில்
12) நீல நிறத்தில்
13) நிறை நிழல் / கரு நிழல்
14) ஒளிமுதலிலிருந்து வெளியிடப்பட்ட ஒளியானது பந்தினூடாகச் செல்லாமை
15) ஒளிமுதலின் ஒரு பகுதியினால் மட்டும் கிடைக்கும் ஒளி
16) புவி, சந்திர கிரகணம்
17) பௌர்ணமி
18) புவியின், சூரியன்
19) அமாவாசை, பகலில்

**9.2 தளவாடியில் பெறப்படும் விம்பங்கள்**

1) திரும்பி
2) அழுத்தமான
3) ஆடியாக
4) விம்பங்களை
5) முடியாது
6) நிமிர்ந்தது
7) பொருளளவானது
8) தென்படும்
9) பின்னால்
10) சமமானது
11) ஆடிக்கு
12) 3
13) 5
14) 7
15) 11

# இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் கிடையாது

## விமல் திட்டவட்டம்



இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்களை நாடாளுமன்றத்துக்குள் அனுமதிப்பது தொடர்பான தங்களின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான விவகாரத்தில் தங்கள் ஆட்சேபனைகளை வெளிப்படுத்தியதாகவும் அந்த நிலைப்பாடு மாறாமல் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ஸ, பஸில் ராஜபக்ஷவோ அல்லது வேறு எந்த உறுப்பினர்களோ நாடாளுமன்றத்துக்குள் நுழைவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை பொருளாதாரச் சவால்களை அவரால் சமாளிக்க முடியுமா என்று தமக்குத் தெரியாது என்றும் அவரால் அவ்வாறு செய்ய முடிந்தால், அது இன்றியமையாததாக இருக்கும் என்றும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

# மேல் மாகாணத்துக்குள் இயங்கும் ரயில் சேவைகள் அதிகரிக்கப்பட்டன

மேல்மாகாணத்துக்குள் இயங்கும் ரயில் சேவைகள் நேற்று (திங்கட்கிழமை) முதல் அதிகரிக்கப்பட்டன.

அதன்படி, இன்று முதல் 103 ரயில் சேவைகள் இயக்கப்படும் என ரயில் போக்குவரத்து பிரதி முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக நேற்று அதிகாலை 50 ரயில் சேவைகள் இடம்பெற்றன. நடமாட்டக்கட்டுப்பாடு மேலும் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லை என்பதை அமைச்சர்களின் கருத்துக்கள் காட்டுகின்றன

## உதய கம்மன்பில கூறுகின்றார்



எரிபொருள் விலை உயர்வுக்கு ஜனாதிபதி பொறுப்பேற்ற போதிலும் அமைச்சர்கள் சிலர் தெரிவிக்கும் கருத்துக்கள் ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லை என்பதைக் காட்டுகின்றன என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எரிபொருள் விலை உயர்வு தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்த கருத்திற்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் எரிபொருள் விலையை உயர்த்துவதற்கான திட்டத்தை கொண்டு வரவில்லை என்றும் எரிபொருள் விலையை அதிகரிக்க ஜனாதிபதி முன்மொழியவில்லை என்றும் காமினி லொக்குகே தெரிவித்தார்.

எரிபொருள் விலை உயர்வு தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவையின் வாழ்க்கைச் செலவுக் குழு கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டதாக உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

ஆகவே அரச தலைவர் அத்தகைய அறிக்கையை வெளியிட்ட பின்னர் அது உண்மையா என ஆராயத் தேவையில்லை என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

# நாட்டை மீண்டும் திறக்க வேண்டும்

## பஸில் வலியுறுத்து



பொருளாதாரத்தை மீட்டெடுக்கத் தடுப்பூசி நடவடிக்கைக்குப் பின்னர் நாட்டை மீண்டும் திறக்க வேண்டிய அவசியம் குறித்து நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார் என அரசாங்க மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவராக நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சுகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டார்.

இதன்போது நாட்டின் உற்பத்தித் தளத்தை புத்துயிர் பெற வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியமையுடன் அவ்வாறு செய்யாவிட்டால் பொருளாதாரத்தைக் கொண்டு செல்லத் தேவையான பணம் இருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் பொருளாதார நடவடிக்கைகளை மேலும் கட்டுப்படுத்தினால் நெருக்கடி நிலைமை அதிகரித்து வேலையின்மை மற்றும் வறுமை அதிகரிக்கும் என்றும் பஸில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

செப்டெம்பர் மாதத்துக்குள் நாட்டை முழுமையாகத் திறக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதே நேரம் முழுமையாகத் தடுப்பூசி செலுத்திக்கொண்ட சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்கவும் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாட்டில் சர்வமதப் பேரவை




கவனம், அபாயம், அவதானம் எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணத்தில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கொரோனா விழிப்புணர்வு பதாதைகள் யாழ்.நகரப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு, கொரோனா விழிப்புணர்வு செயற்பாட்டை ஆரம்பித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மேலும் 190 பேர் சிக்கினார்கள்!

*நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 190 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.*

*இதற்கமைய, கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் தனிமைப் படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 49 ஆயிரத்து 449 ஆக அதிகரித்துள்ளது எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.*

# சித்தங்கேணி சிவன் ஆலய வளாகத்தில் வாள்வெட்டு

## ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டை, சித்தங்கேணி சிவன் ஆலய வளாகத்தில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சித்தங்கேணி சிவன் ஆலய வளாகத்தில், ஆலய நிர்வாகத்திலுள்ள ஒருவருக்கும் வேறு ஒருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதன்போது அங்கிருந்த வேறு ஒரு நபர், ஆலய நிர்வாகத்திலுள்ள ஒருவரை வாளால் வெட்டியுள்ளார். குறித்த சம்பவத்தால் காயமடைந்தவரை அருகில் இருந்தோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

மேலும் சந்தேகநபர் பயன்படுத்திய வாளை மீட்ட ஆலய நிர்வாகத்தினர், வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை திருநெல்வேலியைச் சேர்ந்தவரே வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார் எனவும் ஆலய தகராறே வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெறுவதற்கு காரணமெனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

# 39 லட்சத்து 91 ஆயிரத்து 392 பேருக்கு தடுப்பூசி முதலாவது டோஸ் போடப்பட்டது

நாட்டில் இதுவரை 39 லட்சத்து 91 ஆயிரத்து 392 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் 84 ஆயிரத்து 559 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

மேலும், சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை 23 ஆயிரத்து 368 பேருக்கு போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 3 லட்சத்து 85 ஆயிரத்து 669 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 444 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் 14 ஆயிரத்து 464 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரத்து 435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டகலையில் விபத்து இருவர் படுகாயமடைந்தனர்

நுவரெலியா – பத்தனை, கொட்டகலை ரொசிட்டா பண்ணைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) காலை, கொட்டகலை நகரிலிருந்து லொக்கீல் நோக்கி பயணிப்பதற்கு தயாராக இருந்த வான் ஒன்றின் மீது எதிர்த்திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள், வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியுள்ளது.

இந்த சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும், படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேலும் 26 ஆயிரம் டோஸ் பைஸர் நேற்று அதிகாலை இலங்கைக்கு

இலங்கைக்கு மேலும் 26 ஆயிரம் டோஸ் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த இரண்டாம் தொகுதி பைஸர் தடுப்பூசிகளே கட்டாரிலிருந்து விமானம் மூலம் நேற்று அதிகாலை 02.35 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தன.

அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் இரண்டு லட்சம் பைஸர் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யவுள்ளது. அதனடிப் படையில் இரண்டு தொகுதிகளாக இதுவரை 52 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மூன்றாம் தொகுதி அடுத்த வாரம் கிடைக்கவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள இரண் டாம் தொகுதி பைஸர் தடுப்பூசிகள் மன்னார் மாவட்ட தடுப்பூசி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 64

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**189. புலிகள் சமர்ப்பித்த திட்டத்தில் மாற்று அமைப்பாக என்ன கேட்கப்பட்டது?**

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்தது தற்காலிக சுய நிர்வாகம் அதிகார சபையின் (Interim Self Governing Authority (ISGA)) வடிவில் அமைந்தது. வடக்கு, கிழக்கை உள்ளடக்கியது. அந்தச் சபையின் அங்கத்தினர்களில் விடுதலைப் புலிகள் பெரும்பான்மையைப் பெற அரசாங்கம் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கும். இந்தத் தற்காலிகச் சபை ஒரு நிரந்தரத் தீர்வு வரும் வரை அதிகாரத்தில் இருக்கும். சபை, பாதிக்கப்பட்ட மக்களைக் குடியமர்த்தல், அவர்களின் புனர்வாழ்வு,மீளக்கட்டுமானம், நிதி வசூலிப்பு, அதற்காக வரி தீர்வைகள் போன்றவற்றை ஏற்படுத்த அதிகாரம் கொண்டு காணி,சட்டம் ஒழுங்கு போன்ற துறைகளில் ஒரு பிராந்திய அரசின் நிலையில் இயங்குகின்ற அரசாங்கம் சமர்ப்பித்தது போல, பணப் பட்டுவாடாக்களுக்கான அதிகார சபை (Finance Commission) ஊடாக வட,கிழக்குக்கு ஒதுக்கப்படும் நிதிகளைப் பெற்று, அவற்றைத் திட்டங்களுக்கு பாவித்து, அவற்றின் கணக்குகள் சம்பந்தப்பட்ட அறிக்கைகள் அரசாங்கத்தின் தணிக்கையாளர் நாயகத்திற்கு (Auditor General) சமர்ப்பிக்கப்படும். ஆயினும் சர்வதேசத்திடமிருந்து பெறப்பட்டு வடக்கு, கிழக்குக்கு தரப்பட்ட நிதிகளை கணக்காய்வதற்கு தற்காலிக சுயநிர்வாக சபையால் நியமிக்கப்பட்ட சர்வதேச தணிக்கையாளர் குழுமத்தினால் மேற்பார்க்கப்பட்டு சபையில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மேலும் இந்த அதிகார சபைக்கு வெளிநாடுகளிலிருந்தோ ஸ்ரீலங்காவின் மற்ற பகுதிகளிலிருந்தோ கடன் வாங்கவோ அன்றில் தேவைகளுக்காக உத்தரவாதம் தரவோ, நேரடியாக உள்நாட்டு,வெளிநாட்டு வர்த்தகங்களை அனுமதிக்கவோ, கட்டுப்படுத்தவோ, அந்தப் பகுதிகளில் அரச, தனியார் காணிகளைப் பொறுப்பேற்று அவற்றை விநியோகிக்கவும், பாவனைக்கு உட்படுத்தும் அதிகாரங்களும், மேலும் அரச படைகளின் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளுக்கும் சொத்துக்களுக்கும் நட்ட ஈடும் தருதல் கூடும்.

அதிகார சபையின் வடகிழக்கின் அதிகாரத்தின் கீழ் வரும் கடல் பகுதிகளிலும் அதன் கடல் எல்லைகளின் வளங்களை நெறிப்படுத்துவதிலும் பாவிப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் அதிகாரங்கள் இருக்க வேண்டும்



என்பன இந்த சமர்ப்பணத்தில் அடங்கின. இதனை உருவாக்குவதில் முன்கூறியபடி மதியுரைஞர் பாலசிங்கத்திற்கு எதுவித பங்கும் இருக்கவில்லை. தமிழ்ச்செல்வனால் கொடுக்கப்பட்ட சபையின் அமைப்புக்கள் பற்றி ஒரு வார்த்தை கூட அவர் அறிந்திருக்கவில்லை. ஒரு விதத்தில் ஒப்புக்காக அரசாங்கம் சமர்ப்பித்த உப்புச் சப்பற்ற பெயரளவிலான இடைக்கால நிர்வாக சபைக்கு மாற்றாக இந்த திட்டம் காத்திரமான ஒரு இடைக்கால அதிகார சபையாகவும் அதிகாரங்கள் கொண்டதாகவும் அமைந்தது. இது சமர்ப்பிக்கப்பட்டதும் சந்திரிகாவுக்கும் ரணிலுக்குமான பனிப்போர் பயங்கரமாக வெடித்தது. அந்த நேரம் ரணில் இந்தத் திட்டம் பற்றி ஜனாதிபதி சந்திரிகாவுடன் கலந்தாலோசிக்க அமெரிக்கா பயணம் செய்திருந்தார்.

**190. அதையடுத்து என்ன நடந்தது?**

விடுதலைப் புலிகளின் மாற்றுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு நாள்களுக்கிடையில் 4 நவம்பர் 2003 அன்று சந்திரிகா ரணிலின் அரசாங்கத்திலிருந்த மூன்று அமைச்சர்களை வெளியேற்றி, நாடாளுமன்றத்தை முன்கூட்டியே இயங்கத் தடுத்தல், மந்திரிகளின் காரியதரிசிகளையும் இடை நிறுத்தம் செய்து, அரசாங்



கத்தின் ஊடகங்களைத் தன்னகப்படுத்தினார். அன்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்ற சம்பவங்களும் நாட்டை வழிநடத்த திராணியற்றவர்களின் போக்கும், நாட்டின் பாதுகாப்பை அச்சுறுத்துவதால் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளேன் என்று அறிவித்தார்.

தொடர்ந்து வந்த அபிப்பிராயங்களில் அரசாங்கம் தேவைக்கும் மேலதிகமான சலுகைகளை விடுதலைப் புலிகளுக்கு வழங்க முற்படுகின்றது, அவை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றார்.

நாட்டுத் தலைவர்களிடையே தீர்வு நோக்கிய சமாதான பேச்சுவார்த்தைகளில் இவ்வளவு முரண்பாடான போக்குகள் காணப்பட்டமையால் அதனைத் தொடர்வது பிரயோசனமற்றது என நோர்வேயின் மத்தியஸ்தர்கள் 14 நவம்பர் 2003 இல் விலகி கொண்டனர். நடந்து கொண்டிருந்த ரணிலின் நாடாளுமன்றம் தொடருக்கு இன்னும் நான்கு வருடங்கள் இருந்தாலும் 7 பெப்ரவரி 2004 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைத்து 2 ஏப்ரல் 2004 இற்கு தேர்தலும் குறித்தார். அந்த தேர்தலுக்காகவும் தனது அரசியல் வாழ்வை மேலும் நீட்டுவதற்காகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டாரேயொழிய சமாதான பேச்சுவார்த்தைகளில் சந்திரிகா பெரும் நாட்டம் காட்டவில்லை.

அவருடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியினரோடு தேர்தல் ஒப்பந்தம் செய்தது. ஜே.வி.பி. என்றுமே, விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளுக்கு எதிர் நின்று, அதிகாரப் பரவல், முக்கியமான தமிழ்ப் பிரதேசங்களுக்கானது, நாட்டின் இறைமைக்கும் அரசுக்கும் சமனான இன்னுமொரு அரசை அந்த பகுதிகளில் ஏற்படுத்தும் என பிரச்சாரம் செய்தது. ஏப்ரல் 2004இல் நடந்த தேர்தலுக்கு இந்த இனவாதப் பேச்சுக்களும் தமிழருக்கு எதுவும் தருவது நாட்டின் இறைமைக்கு ஆபத்தானது என்ற கருத்துமே முக்கிய சமாச்சாரமாயின. இவற்றினால் சந்திரிகாவின் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றது.

**191. விடுதலைப் புலிகள் என்ன இக்கட்டில் இருந்தார்கள்?**

சந்திரிகாவின் இந்த நடவடிக்கையை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. பயங்கரவாதப் பட்டியலில் அவர்களது பெயர் சேர்க்கப்பட்டு ஓரங்கட்டப்படுவதின் பாதிப்புகளை உணர்ந்தார்கள். ஆகவே அவற்றை தள்ளி வைத்து, பொருட்படுத்தாது, தாங்கலும் ஸ்ரீலங்காவும் சர்வதேச நாடுகளில் சரிசமமாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என விரும்பினார்கள். அதற்காக தமிழ் மக்கள் தம் பக்கம் நிற்கின்றார்கள், அவர்கள் விடுதலைப் புலிகளைத்தான் ஆதரிக்கிறார்கள் என்பதை சர்வதேசத்துக்கும் எடுத்துக் காட்ட வேண்டும் என விரும்பியதாலும் -

டோக்கியோ தீர்மானங்களில் வட, கிழக்கு பகுதிகளில் ஜனநாயகம் தலையெடுக்கவேண்டும், சிவில் அமைப்புக்கள் சமுதாய அலுவல்களில் வெளிப்படையான பங்குபற்றுதல் இருக்கவேண்டும் என நிர்ப்பந்தம் செய்ததால் அந்த வழிகளுக்கும் -

ஏற்றதாகப் போக வழிகள் எடுத்தனர்.

ஒஸ்லோவில் ஏற்பட்ட இணக்கம் மதியுரைஞர் பாலசிங்கத்தை பாதித்தது போல், தளபதி கருணாவையும் பாதித்து, அவரும் வெளியேறி, இராணுவ ரீதியில் பலமான, தாக்கங்களையும் ஏற்படுத்தியமை மட்டுமல்லாமல் பிரதேசவாதத்தையும் மூட்டிவிட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு கிழக்கு மாகாணத்தில் தமது செல்வாக்கை நிரூபிக்கும் சோதனையும் முன்னின்றது. ஆகவே தங்கள் கட்டுப்பாட்டில் இயங்கக் கூடிய ஒரு வெளித்தோற்றமான அரசியல் கட்சியை, ஒத்துவந்த நாடாளுமன்ற அங்கத்தினர்களோடு, தமிழர் தேசியக் கூட்டமைப்பு என்று ஆரம்பித்தார்கள். அது இயங்கத் தொடங்கிய காலத்திலிருந்து தங்களது கட்டுப்பாட்டு பகுதிகளில் நடக்கும் ஜனநாயக ரீதியான தேர்தலை ஊக்குவிக்கிறார்கள் என விடுதலைப் புலிகள் அறிவித்தனர். அதற்காக, வடக்கு, கிழக்கில் இருந்த நாடாளு



மன்ற அங்கத்தினர், தங்களுக்கு நியமனத்திற்காகவும் விடுதலைப் புலிகளின் ஆதரவுக்காகவும் பிரபாகரனது சந்திப்புக்காக கிளிநொச்சி சென்றனர். அது, திருகோணமலை சம்பந்தனையும் உள்ளடக்கியது. பிரபாகரனுக்கு 'சல்யூட்' அடிக்கக் கோரப்பட்டு அதையும் செய்து, விடுதலைப் புலிகளின் கரும்புலிகளுக்கும் மாவீரர்களுக்கும் மரியாதை செலுத்தி கூட்டமைப்புத் தலைவராக அந்தத் தேர்தலில் போட்டியிட்டார் அவர். சம்பந்தன் தனது தேர்தல் கால உரையில் முக்கிய செய்தியாக தமிழ் மக்களுக்கு தந்தது. "நாங்கள் இந்தத் தேர்தலை ஒரேயொரு நோக்கத்திற்காகத் தான் எதிர்கொள்ளுகிறோம். அது எதுவெனில் சர்வதேச சமூகத்திற்கு வடக்குக் கிழக்கில் சீவிக்கும் தமிழ் மக்கள் முற்றாக விடுதலைப் புலிகளுக்கு பின்னால், அவர்கள் முன்னெடுக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கும் அவர்கள் அரசாங்கத்துக்கு சமர்ப்பித்திருக்கும் இடைக்கால சுயநிர்வாக அதிகார சபைக்கான திட்டத்தையும் ஆதரிக்கிறோம் என்பதை வெளிக்காட்டி நிரூபிக்கவே" - என்றார்.

தளபதி கருணா, இந்தத் தேர்தல் காலங்களின் பயங்கர பிரதேசவாதத்தையும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்களையும் நடத்தி, கிழக்கு மாகாணத்தில் இருந்த யாழ்ப்பாண மக்களை பயமுறுத்தி வாக்குரிமை செய்ய விடாது தடுத்தார். ஆனாலும் 2 ஏப்ரல் 2004இல் நடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் ஆதரவில் வடக்கு, கிழக்கில் 22 ஆசனங்களை கைப்பற்றியது. அதேசமயம் ஜாதிக ஹெல உறுமய என்ற பௌத்த பேரினவாத அமைப்பில் ஒன்பது பௌத்த பிக்குகள் தெரிவாகினார்கள். சமாதானத்தில் நாடு, பழையபடி இக்கட்டுகளில் வந்து நின்றது.

(வளரும்.....)

இன்று மாணிக்கவாசகர் குருபூசை

# வாதவூர் வண்டை மனமதில் இருத்துவோம்!

தேனை நாடி வண்டுகள் ஓடும். தேனைச் சுவைப்பதில் வண்டுகளுக்கு பேரானந்தம். இந்த வண்டு மற்றைய வண்டுகள் போன்றதன்று. இவ்வண்டு திருவாதவூரில் இருந்து வந்த வண்டு. ஏனைய வண்டுகள் பல மலர்களையும் நாடி நிற்க, வாதவூர் வண்டு வேத உபநிடதங்களை நாடி அங்கு திருவாசகம் என்னும் உயரிய தேனைப் பருகி எமக்கெல்லாம் வழங்கி இருக்கிறது. அந்த வண்டு வழங்கிய தேனான திருவாசகம் தொட்டாலும் இனிக்கும். கேட்டாலும் இனிக்கும். படித்தாலும் இனிக்கும். சொல்லச் சொல்ல இனிக்கும் சொற்களால் ஆனதுதான் அந்த வாசகம் திருவாசகம். இதனால்தான் "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்று பலரும் வியந்து போற்றும் நிலை அமைந்து விட்டது.

திருவாதவூரில் பிறந்தபடியால் திருவாதவூரர் என்றும், மணிமணியான வார்த்தைகளை வழங்கியமையால் மணிவாசகர் என்றும், அவரின் ஒவ்வொரு வார்த்தைகளும் சைவத்துக்கும், தமிழுக்கும் மாணிக்கமாய் அமைந்தமையால் மாணிக்கவாசகர் என்றும் யாவராலும் பெருமதிப்புடன் அழைக்கப்பட்டார்.

அந்தணகுலத்தில் பிறந்து, பேராளுமை மிக்கவராய் விளங்கினார் மணிவாசகப் பெருமான் என்று அவரைப்பற்றி திருவாதவூரடிகள் புராணம் வாயிலாக அறிகின்றோம். மணிவாசகப் பெருமானின் ஆளுமையினை அவர் வாழ்ந்த பாண்டி நாட்டின் அரசன் அரிமர்த்தன பாண்டியன் அகத்தில் இருத்தி அவரை தனது அரசாட்சியில் முதலமைச்சர் ஆக்கினான். அத்துடன் அவரின் ஆற்றல்களை மெச்சி தென்னவன் பிரம்மராயன் என்னும் பட்டத்தையும் வழங்கிப் பெருமைப்படுத்தினான். மன்னவன் இவ்வாறு பெருமைப்படுத்தினான் என்பதை பின்வரும் புராண பாடல் விளக்கும்:-

**தென்னவன் பிரமராயன் என்றருள் சிறந்த நாமம்**
**மன்னவர் மதிக்க நல்கி வையகம் உய்வதாக**
**மின்னவ மணிப்பூணாடை வெண்மதிக்கவிகை தண்டு**
**மொன்னவர் கவிரி வேழமளித்தனன் பொருநை நாடன்**

வாதவூராரினை தனது அகத்தில் ஏற்றிய மன்னவன் மற்ற மன்னவர்களும் மதிக்கும் வண்ணம், அவருக்கு நன்மதிப்பினைக் கொடுத்தான். நவரெத்தினத்தாலான ஆபரணங்கள், பட்டுப்பீதாபரங்கள், சந்திரன் போன்ற வெண் கொற்றக் குடை, முத்திலான சிவிகை, பொன்னாலான காப்பு, சாமரை, யானை என்று அளித்து ஆனந்தம் அடைந்தான் – என்று வாதவூரடிகள் புராணம் சுட்டிக் காட்டி நிற்கிறது.

அதிகாரம் மிக்க பதவி! அரசனின் அன்பும் ஆதரவுமான நிலை! எதையும் செய்யும் இருப்பிடம்! இவை எவையையும் வாதவூரர் உள்ளம் பெரிதாக ஏற்றுக் கொண்டதாகவே தெரியவில்லை. புகழும், ஆடம்பரங்களும் நிலையாய் இருக்க மாட்டா என்னும் நினைப்பால் நிலையாயிருக்கும் அப்பரம் பொருளையே அவர் நாளும் பொழுது எண்ணியபடி அமைச்சர் என்னும் பெயரில் பாண்டியன் அவையில் இருந்தார் எனலாம். ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் எண்ணமே அவருள்ளத்தில் ஆழமாய் ஆணிவேராய் இருந்தது எனலாம்.

திரும்பெருந்துறையில் நல்ல அரேபியக் குதிரைகள் வந்திருப்பதாயும் அதனைப் பார்த்து வாங்கி வரும்படியும் திரவியங்களை அரசன் அமைச்சரான வாதவூரரிடம் கொடுக்கிறான். அமைச்சரான வாதவூரரும் குதிரைகளை வாங்குவதற்கு செல்கிறார். அங்கு அவர் குருந்தமர நிழலில் ஒரு ஆனந்தப் பேரொளியினைக் காணுகிறார். தன்னை மறக்கிறார். தான் வந்த பணியை மறக்கிறார். அந்த ஞான ஒளியுடை மகானின் திருவடியில் சங்கமம் ஆகிறார்.

குதிரை வாங்கச் சென்ற அமைச்சர் நீண்டநாள் வராதபடியால் அரசன் தூதுவர்களை அனுப்பி நிலைமையினைப் பார்த்துவருமாறு பணிக்கிறான் சென்ற தூதுவர்கள் வாதவூரரின் நிலையினை மன்னனிடம் தெரிவிக்கவே மன்னவன் அடங்காச் சினங்கொள்ளுகிறான். சினத்தால் வாதவூரரை வதைக்கிறான். உலகினை மறந்த வாதவூரர் அந்தப் பரம்பொருளிடம் அடைக்கலமாகிறார்.

ஆண்டவனின் ஆணைப்படி ஆவணி மூலத்தில் ஏற்கனவே ஒழுங்கு செய்த குதிரைகள் வரும் என்று அரசனால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற வாதவூரர் மொழிகின்றார். குதிரைகளும் குறிப்பிட்ட நாளில் வருகின்றன. அரசன் வாதவூரரிடம் மன்னிப்புக் கேட்கின்றான். அனால் வந்த குதிரைகள் அனைத்துமே அன்றிரவு நரிகளாய் மாறிவிட்டன. அரசன் ஆத்திரம் மேலோங்குகிறது. வாதவூரரை சிறையில் அடைக்கின்றான் . உயரிய பதவியைக் கொடுத்த அரசனே அவரை திரவியங்களை அபகரித்த குற்றவாளியாக்குகிறான். வாதவூரர் துன்பம் படைத்தவனுக்குப் பொறுக்கவில்லை. வைகை ஆறு பெருக்கெடுக்கிறது. அரசன் திகைக்கிறான். பெருகிவரும் நீரைத் தடுக்க நாட்டுமக்களுக்கு அரசன் ஆணையிடுகிறான்.

பலரும் தமக்கான பங்கினை செய்கிறார்கள். ஆனால் பிட்டுவைத்துப்பிழைப்பு நடத்தும் செம்மனச் செல்வி என்னும் மூதாட்டிக்கு உதவிட யாருமே இல்லாதிருந்தது. அவ்வேளை எம்பெருமானே வேலையாளாய் வருகிறார். ஒழுங்காய் வேலை பார்க்காத காரணத்தால் அரசனின் காவலர்கள் பிரம்படிக்கு ஆளாகிறார் ஆதி அந்தமில்லா அந்த அரும்பொருள் ஜோதி!




பரம்பொருளின் முதுகில் விழுந்த அடி அரசனின் முதுகில் விழுந்தது. அனைவரின் முதுகிலும் விழுந்தது. அரசன் விழித்தான். அஞ்ஞானம் அகன்றது. வாதவூரரை விடுவித்து விழுந்து விழுந்து வணங்கினான். என்ன நல்ல கதையாக இருக்கிறதா? வாதவூரர் வரலாற்றில் இவற்றைக் காணுகிறோம்.

**கல்லால் ஒருவன் அடிக்க உடல் சிலிர்க்க**
**காலில் செருப்பால் ஒரு வேடன் வந்தே உதைக்க**
**வில்லால் ஒருவன் அடிக்க**
**வீசி மதுரை மாறன் பிரம்பால் அடிக்க ...**
**அந்த வேளை யாரை நினைத்திரோ ... அய்யா**
**பெற்ற தந்தை தாய் இருந்தால் உலகத்தில் உமக்கிந்த**
**தாழ்வெல்லாம் வருமே அய்யா**

– என்று ஓர் இறையன்பர் பாடுவதில் பிரம்படி பட்ட செய்தி எப்படி வருகிறது பாருங்கள்.

மனிதன் தெய்வத்தோடு வைக்கின்ற இணக்கமானது எப்படியாய் இருப்பினும் அது நல்லதையே நல்கும். அடியுண்ட அரசனுக்கு நல்லறிவு பிறந்தது. வாதவூரருக்கு பலவகையில் உதவிட அரசன் முன் வந்தான். ஆனால் வாதவூரரோ தாம் துறவறத்தையே நாடுவதாகக் கூறினார். அரசனும் வாதவூரர் வழியினைப் பெருவழியென ஏற்றுக் கொண்டான்.



மனிதன் என்பவன் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்கும் பொழுது அத்துறைக்கு ராஜன் ஆகிறான். பாண்டிய மன்னன் அவையில் அமைச்சர் ஆனதால் வாதவூரர் புவிராஜனாகிறார். தித்திக்கும் திருவாசகத்தை அளித்ததமையால் கவிஜாரன் ஆகிறார். அவரின் பக்தியுடை வாழ்வால் அவர் தவராஜனாகிறார். பல சிறப்புக்களைப் பெற்ற வாதவூரர் நிறைவில் நடராஜனுக்கே உரியவராய் திகழ்கிறார் எனலாம்.

வாதவூரர் வண்டாய் பறந்தார். அந்த வண்டு திருவாசகம் என்னும் தேன் கூட்டையும் திருக்கோவையார் என்னும் தேன் கூட்டையும் கட்டி நாமனைவரும் நாளும் பொழுதும் வேண்டிய தேனைப்பெற்று சுவைத்திட வழி சமைத்திருக்கிறது எனலாம்.

**உடையாள் உந்தன் நடு இருக்கும்**
**உடையாள் நடுவுள் நீ இருத்தி**
**அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்**
**அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்து**
**முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே**

என்னும் வேண்டுகளை வாதவூர் வண்டு இறைவனிடம் சொல்லுகிறது. இது தெவிட்டாத் தேனாகி இனிக்கிறதல்லவா!

திருவாசகமென்னும் தேன் பருகினார் ஒரு அடியவர். அவரால் தனது உணர்வினை வெளிப்படுத்த சொற்களைத் தேடுகிறார். அவர் தேடியதை அளிக்கிறார் பருகுவோம் வாருங்கள்....

**வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்**
**ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே**

– இப்படிச் சுவைத்தவர்தான் வள்ளல் பெருமான்.

வாதவூர் வண்டு மலர்கள்தோறும் எடுத்துவந்த தேனால் ஆக்கப்பட்ட திருவாசகத்தை தமிழர்களாகிய நாம் மட்டும் சுவைத்து மகிழ்வது பெருமைதான். ஆனால் தமிழ் அறியா ஒருவர், எங்கள் சைவம் சாரா ஒருவர், அதுவும் ஆசிய நாட்டைச் சேராத ஒருவர், ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஒருவர் கிறிஸ்தவ பாதிரியாரானவர் திருவாசகமென்னும் தேனைத் தொட்டதும் தன்னை மறந்தார். அந்தத் தேன்கூட்டுக்குள்ளேயே புகுந்து தேனை மாந்திக் கொண்டே இருந்தார் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தல்லவா!


சிவனை முழுமுதற் கடவுளாகப் பாடி உருகிடும் திருவாசகம் என்னும் தேன் ஒரு கிறிஸ்தவ அருட்தந்தையை எப்படிக் கவரமுடியும் ? இது ஒரு முரண்பட்ட நிலையாகத் தெரிகிறது அல்லவா! இறைவன் என்பவன் ஒருவனே. திருவாசகத்தில் சிவனாக காட்சியளிக்கும் ஆண்டவன்தான் பரமண்டலத்தில் வீற்றிருக்கும் பிதாவாக கிறிஸ்தவ அருட்தந்தை ஜி.யூ போப் அவர்களின் உள்ளத்தில் பதிந்திருக்கலாம். இதனால் அவர் ஆங்கிலத்தில் திருவாசகத்தேனை மொழிபெயர்த்து அனைவருமே பயனுறச் செய்தார். லண்டன் மாநகரில் கிறிஸ்தவ தேவாலயத்தில் முழந்தாளிட்டு செபம் செய்யும் வேளை 'தன்னருகில் மாணிக்கவாசகரும் செபம் செய்வதாக' தான் உணர்ந்ததை திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பு நூலில் பதிவிட்டுள்ளார் என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். இதுவே சமயங்கடந்த பக்தி நிலை எனலாம். இதனை வாதவூர் வண்டின் 'திருவாசகம் என்னும் தேன்' செய்திருக்கிறது.

**நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க**
**கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க**
**ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க**
**ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க**

என்று இறைவனுக்கு வாழ்த்துக் கூறிய வாதவூர் வண்டினை நாமனைவரும் மனத்தினில் இருத்துவோம். இருத்தினால் ......

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீங்கும்! அல்லல் அறுபடும்! ஆனந்தம் பெருகும்! அத்துடன் மருவா நெறியும் அளிக்கும்!

**- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -**
**(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)**




# சினிமாத்தடம்

## ஒரு பார்வை

ஈழத்தமிழ் இலக்கிய மற்றும் ஊடகத் துறைப் பரப்பிலே அனைவராலும் நன்கு அறியப்பட்டவரே ஜி.ரி. கேதாரநாதன் அவர்கள். இவர் வீரகேசரிப் பத்திரிகையில் ஆசிரியப் பீடத்தில் சிரேஷ்ட ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் சிறந்த ஊடகவியலாளர், திரைப்பட விமர்சகர் மட்டுமன்றி மிகச்சிறந்த மொழி பெயர்ப்பாளரும் கூட. தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த மொழியாற்றல் கொண்ட இவர் பல ஆங்கிலக் கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார்.

நிகரி திரைப்பட வட்டத்தினூடாகப் பல சர்வதேச திரைப்படங்கள் திரையிடப்படுவதற்கும், அதனூடாகக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுவதற்குமான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தவர் எனவும் குறிப்பிடலாம். திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வமுள்ள இவர் ஆரம்பக் காலத்திலிருந்து நல்ல பல திரைப்படங்களைப் பார்வையிட்டமையோடு, அது தொடர்பான விமர்சனப் பாங்கான கருத்துக்களையும் முன்வைத்து வந்தார். தன்னுடைய இளமைப் பருவம் முதல் தான் பார்க்கும் சினிமாக்கள் நாவல் களின் தழுவல்களாக இருப்பின் அந்நாவலைத் தேடி அறிந்து வாசிக்கும் பழக்கம் கொண்டவராக இருந் துள்ளார். இதுவே அவருடைய திரைப்பட ஆர்வத்தை எமக்கு எடுத்துக் காட்டக் கூடியதாகவுள்ளது.

இவர் ஆரம்பக் காலங்களிலிருந்து பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் சிறந்த சர்வதேச திரைப்படங்கள், சிறந்த நெறியாளர்கள் சார்ந்த கட்டுரைகள், ஒளிப்பதிவாளர்களின் பதிவுகள் என பலவற்றை எழுதி வந்துள்ளார். ஆங்கிலத்தில் வெளிவந்த திரைப்பட விமர்சனங்கள் மற்றும் நேர்காணல்களையும் தமிழில் மொழிப்பெயர்த்து பத்திரிகைகளினூடாக எம்மவர்களின் கரங்களுக்கும்கொண்டு சேர்த்துள்ளார்.

அனைத்துலகத் திரைப்படங்கள் சார்ந்தும் தமது கண்ணோட்டத்தையும், ஆராய்ந்து அறிந்த விடயங்களையும் சிறந்த தேடலுடன் முன்வைத்து தனக்கென தனியிடத்தைத் தக்கவைத்தவர்களுள் இவரும் ஒருவர். இலங்கையில் தமிழ்ப் பரப்பில் சிறந்த திரைப்பட விமர்சகராகத் திகழும் ஜி. ரி. கேதாரநாதனது எழுத்துக்களில் இருந்து தொகுக்கப்பட்ட சிறந்த ஆக்கங்கள் 'சினிமாத்தடம்' என்ற நூலினூடாக இன்று வாசகர்கள் மத்தியில் கைவரப் பெற்றுள்ளது.

எம் மத்தியில் இதுபோன்ற படைப்புக்கள் குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பத்திலும், சர்வதேச திரைப்படங்களைப் பார்வையிடும் பழக்கம் அருகியுள்ள காலத்திலும் இச்சினிமாத்தடம் என்ற நூலானது வெளிவந்திருப்பது பெருமகிழ்ச்சியளிக்கின்றது. தென்னிந்தியப் பொழுதுபோக்கு சினிமாவிற்கு ஆட்பட்டுள்ள நாம் உலகளாவிய சினிமா பற்றி அறிய வேண்டிய பல பக்கங்கள் உள்ளன. இதுபோன்ற படைப்புக்கள் சர்வதேச சினிமாவின் அவசியத்தை உணர்த்தவல்லன.

சினிமா என்பது இலங்கையைப் பொறுத்தளவில் – அதுவும் தமிழ்ப் பரப்பை பொறுத்தளவில் – வளர்க்கப்பட வேண்டிய ஓர் துறையாகும். எம்மிடையே பல கதைகள் உண்டு. ஆனால் அதைச் சிறந்த முறையில் வெளிக்கொண்டு வருவதற்கான வழிகாட்டுதல் இன்மை மற்றும் பரிச்சயமின்மை முக்கிய பிரச்சினையாக உள்ளது. தமிழ்ப் பரப்பில் இத்தகைய சினிமா சார்ந்த புத்தகங்கள் அரிதாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் இந்நூலின் வருகை பெறுமதிமிக்கதென்றே கூற வேண்டும்.

மு. துலாபரணி
(ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இந்நூலினை ஆசிரியர் இரு பகுதிகளாக வகுத்துள்ளார். இங்கு பகுதி ஒன்றில் தான் பார்த்து ரசித்த மாற்று சினிமாக்கள் பற்றிய பதிவுகளையும், திரைப்பட நெறியாளர்கள் பற்றிய பார்வைக் கோணத்தையும், சர்வதேசத் திரைப்பட விழா மற்றும் குறும்படங்கள் பற்றிய அறிமுகத்தையும் வழங்கியுள்ளார். திரைத்தடம் என்னும் பகுதி இரண்டில் அவரால் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிப்பெயர்ப்புச் செய்யப்பட்ட சிறந்த திரைப்படக் கட்டுரைகள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

இங்கு இவர் அதிகமாக மாற்று சினிமாக்களை நோக்கியே தன்னுடைய பார்வையை செலுத்தியுள்ளமை இந்நூலை வாசிக்கும் அனைவருக்கும் புலப்படக்கூடிய ஒன்றாகும். அதனடிப்படையில் மேலை நாட்டில் வெளிவந்த நவயதார்த்த சினிமாக்கள் சார்ந்து அதிகம் ஆசிரியர் பேசியுள்ளார்.

நவயதார்த்த சினிமாக்கள் என்னும் போது நாம் இத்தாலி மற்றும் ஈரானிய சினிமாக்களை ஓரங்கட்டி விட்டுப் பார்க்க இயலாது. ஏனெனில் வாழ்க்கையின் யதார்த்தத்தை இரசனையோடு வழிகாட்டி உலக சினிமாவுக்கான அடித்தளத்தை இட்டவர்கள் இத்தாலியர்கள். ஆரம்ப காலத்தில் இத்தாலியில் ஆடம்பரமான, அதீதப் பாங்கான கதைகளை ஒட்டியே திரைப்படங்கள் வெளிவந்தன. இவை மக்களின் இருப்புப் பற்றியோ அல்லது நாட்டின் நிலைமைப் பற்றியோ வெளிக்கொண்டு வரவில்லை. ஏன் உண்மையான இத்தாலியைக் கூட அவை பிரதிபலிக்கவில்லை. இதனை உடைத்து இத்தாலியின் நிலையை உலகறியச் செய்ய எண்ணிய திரைப்பட நெறியாளர்கள் நியோரியலிஸத் திரைப்படங்களை உருவாக்கி வெளியுலகுக்கு உண்மைநிலையைக் கொண்டு வந்தார்கள். இவ்வாறு நியோரியலிசக் காலங்களில் தோற்றம் பெற்று இன்றுவரைப் பேசப்படும் இத்தாலிய திரைப்பட நெறியாளரான விற்றோரியா டீ சிக்காவின் சிறந்த படைப்பான The Bicycle Thief பார்வையை இங்கு விவரித்துள்ளார். போரின் பின்னரான வறுமையை எளிமையாக வெளிப்படுத்தி நிற்கும் இத்திரைப்படத்தைத் தன்னுடைய சமூகப் பார்வையிலிருந்து ஆசிரியர் முன்வைத்துள்ளார். யதார்த்தமான கதைகளைத்தை விவரித்துள்ள ஆசிரியர், அதனூடாக கதாபாத்திரங்கள் சார்ந்தும் உற்று நோக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.

இத்தகைய திரைப்படங்களின் அறிமுகம் யுத்தத்தின் வடுக்களை அல்லது எம் இருப்பை எவ்வாறு வெளிக்கொண்டு வரலாம் என்பதற்கான சிறந்த வழிகாட்டுதலாக அமையும் என்பதாலும், இரண்டாம் உலகப் போரினால் சிதைக்கப்பட்ட ஐரோப்பாவின் யதார்த்தப் போக்கினை உணர்த்தும் திரைப்படமாகவும் திகழ்வதாலும் ஆசிரியர் இத்திரைப்பட உருவாக்கத்தின் பின்னணி சார்ந்து சில விடயங்களை இக்கட்டுரையில் இணைத்திருப்பின், முப்பது ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் இன்று இலங்கையில் வளர்ந்து வரும் திரைப்படத்துறை சார்ந்தோருக்கான மேலதிக தகவல்களையும், பின்னணிப் பார்வையையும் அளிப்பதாய் அமைந்திருக்கும்.

அத்தோடு இத்தாலிய நியோரியலிஸத்தின் அடியொற்றித் தோற்றம் பெற்றதே ஈரானிய சினிமாக்கள் ஆகும். இங்கும் சமூக யதார்த்தங்களைத் தாங்கிய படைப்புக்கள் வெளிவரத் தொடங்கின. 80, 90 காலப்பகுதிகளில் ஈரானியத் திரைப்படங்கள் சர்வதேசப் பார்வையைப் பெற்றமையோடு, பல சர்வதேச உயர் விருதுகளையும் சுவீகரித்துக் கொண்டுள்ளது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட திரைப்படங்கள் ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை இலங்கையில் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு வருகின்றன. அன்றைய காலகட்டத்தில் இத்திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட ஈரானிய திரைப்படங்களைப் பார்த்து ரசித்த ஜி. ரி. கேதாரநாதன் அவர்கள் அவ்வருடத்தில் திரையிடப்பட்ட ஈரானியத் திரைப்படங்கள் சார்ந்தும் இந்நூலில் பேசியுள்ளார்.

சமூக ரீதியிலான நிஜமான வாழ்க்கைப் பரிமாணங்களோடு Children of Eternity, Love without Frontiers, Wet Dream, Twenty மற்றும் Lost Time திரைப்படத்தினை ஆசிரியர் அணுகியுள்ளார். டெரக் சான் டெக்கின் முன்னைய இரு படைப்புக்களான Children of Eternity மற்றும் Lost Time ஆகிய திரைப்படங்களில் கதை சொல்லும் விதத்தில், இறுதியில் இயக்குநர்கள் விடும் தவறுகளைத் தனக்கேயுரிய பாணியில் கூறியுள்ள ஆசிரியர் இவ்விரண்டு திரைப்படங்களும் தேறக்கூடிய திரைப்படங்களாகவும் அடையாளப்படுத்தியுள்ளதோடு, வருடத்திற்கொரு முறை நடக்கும் திரைப்பட விழாக்களில் இத்தகைய படைப்புக்கள் பார்வையாளர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றன எனவும் தன் எழுத்தினூடாக உணர்த்தியுள்ளார்.

அத்தோடு, முற்று முழுதாக ஈரானில் வர்த்தகச் சினிமாவின் ஆதிக்கம் அதிகரித்திருந்த காலத்தில் கலைத்துவமான, யதார்த்தமான மாற்று சினிமாக்களை நோக்கி பயணித்த திரைப்பட நெறியாளர்களான டாரியுஸ் மெக்ஞுஜி, பக்மன் ஹோபாடி மற்றும் அப்பாஸ் ஹெரொஸ்ரமி ஆகியோரின் படைப்புக்கள் சார்ந்த கட்டுரைகளும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டு இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன. இங்கு நியோரியலிஸம் சார்ந்த படைப்புக்களை உருவாக்கும் நெறியாளர்களின் ஆரம்ப கால படைப்புக்கள் தொடக்கம் இறுதிப் படைப்புகள் வரை எவ்வாறு மாற்றமடைந்து வந்துள்ளன என்பதையும், அவர்களின் படைப்புக்களில் காணப்பட்ட குறை, நிறைகளையும் வேறுபாடுளையும்தான் பார்த்து, பயின்று அனுபவத்தின் மூலம் பெற்ற அறிவைக் கொண்டு மிகக் காத்திரமாகத் தொகுத்துள்ளார் ஆசிரியர். மெக்ஞுஜி போன்ற ஈரானியத் திரைப்பட நெறியாளர்கள் வர்த்தக சினிமா கோலொச்சிய காலத்தில் மாற்று சினிமாவுக்கான களங்களை அமைத்துக் கொடுத்தவர்கள்.

ஈரானியத் திரைப்பட விழாக்களிலும், சர்வதேச திரைப்பட கலந்துரையாடல்களிலும் கலந்துகொள்ளும் ஆசிரியருக்கு மெக்ஞுஜி போன்ற படைப்பாளிகளின் படைப்புக்களில் புலமை அதிகம் உள்ளது என்றே கூற வேண்டும். பல ஈரானிய திரைப்படங்களைப் பார்த்து பரிச்சயம்மிக்க இவர் மெக்ஞுஜியின் படைப்புக்கள் ஆவண மற்றும் கதைப்பாங்காயிருப்பதை இங்கு சுட்டிக்காட்டியுள்ளார். மெக்ஞுஜியின்




படைப்புக்களில் நெருக்கடியிலிருந்து மீட்சிக்காண முடியாத அவநம்பிக்கை, சில திரைப்படங்களில் பார்வையாளர்களின் ஈர்ப்புக்கு உள்ளாகக் கூடிய கதாநாயகர்கள் இன்மை, மலட்டுத் தன்மை மற்றும் பிள்ளைப் பேறின்மை போன்ற சித்திரிப்புக்களே அதிகம் இடம்பிடித்துள்ளமையை முறையான உதாரணங் களுடன் சுட்டிக்காட்டியுள்ளார். இங்கு திரைப்பட நெறியாளர்களின் ஆளுமையை தான் பார்த்த சினிமாவிலிருந்தும், தன் அனுபவத்தினூடாகக் கற்றுக் கொண்ட சினிமாவிலிருந்தும் வேறுபிரித்து, கலைஞர்களுக்கு அல்லது வாசகர்களுக்கு ஒரு நெறியாளரின் படைப்பின் தன்மை குறித்தும், அவர்களின் படைப்புக்களின் வேறுபாடுகள் குறித்தும் வழிகாட்டப்பட்டுள்ளமை சிறந்ததோர் பணியாகும்.

தொடரும்.

# 10 கோடி 30 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா அனலைதீவுக் கடலில் மீட்பு

## கடத்தி வந்த மூவரும் கடற்படையினரால் கைது





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜுலை 13

யாழ்., அனலைதீவு கடற்பரப்பில் 344 கிலோ 550 கிராம் கேரள கஞ்சாவை மீட்ட கடற்படையினர், கஞ்சாவைக் கடத்தி வந்த மூவரையும் கைதுசெய்துள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படையினர் நேற்று அதிகாலை கடலில் சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்துக்கு இடமாக பயணித்த டிங்கிப் படகொன்றை வழிமறித்து சோதனைக்குட்படுத்தினர்.

அதன்போது படகில் 11 பொலித்தீன் பைகளில் சுற்றப்பட்ட 344 கிலோ 550 கிராம் கேரள கஞ்சா காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து அவற்றை மீட்ட கடற்படையினர், படகில் இருந்த மூவரையும் கைதுசெய்து படகையும் கைப்பற்றினர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா, படகு, கைது செய்யப்பட்ட மூவரையும் காங்கேசன் துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வந்த கடற்படையினர் மேலதிக நடவடிக்கைகளுக்காகக் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதேவேளை, மீட்கப்பட்ட கேரள கஞ்சாவின் சந்தை பெறுமதி 10 கோடி 30 லட்சம் ரூபா எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# தங்குவதற்கு அறைகேட்ட மகனை அடித்துக் கொலை செய்த தந்தை

## கண்டியில் கொடூரம்

மனைவி மற்றும் கைக்குழந்தையுடன் தங்குவதற்கு வீட்டில் அறையொன்றைக் கோரிய மகனை அவரின் தந்தையும், சகோதரியின் கணவரும் அடித்துப் படுகொலை செய்துள்ள பெருந்துயர் சம்பவம் கண்டி - ஹசலக பகுதியில் இடம்பெற்றுள் ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான சுனில் நிஷாந்த என்ற 28 வயது இளம் குடும்பஸ்தரே இவ்வாறு அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நிரந்தர தொழில் எதுவுமில்லாததால் கூலி வேலை செய்தே சுனில் தனது குடும்பத்தைக் கவனித்து வந்துள்ளார்.

தனது பெற்றோரின் வீட்டில் பின்பகுதியில் இவர்களுக்காக அறையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. அதில்தான் வசித்து வந்துள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் சுனிலின் மனைவிக்கு மற்றுமொரு குழந்தை பிறந்துள்ளது. எனவே, அவர்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு வீட்டினுள் அறையொன்றைக் கோரியுள்ளார். இதனை அடிப்படையாக வைத்தே கடந்த 6ஆம் திகதி மோதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சுனிலின் தந்தையும் மச்சானும் இணைந்து அவரைக் கடுமையாகத் தாக்கினர் எனப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த சுனில் மஹியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக் காக பதுளை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனையடுத்து அவரின் சடலம் ஊருக்குக் கொண்டுவரப்பட்டது. பிரதேச வாசிகள் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கவில்லை. ஊரிலுள்ள பிரஜா நிலையத்தில் வைத்து இறுதிச் சடங்கு நடத்தினர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட வர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

# மூடப்பட்டுள்ள பாடசாலைகளை ஓகஸ்ட்டில் திறக்க நடவடிக்கை

## இணையவழிக் கல்வி நிரந்தரத் தீர்வு அல்ல; கல்வி அமைச்சர் பீரிஸ் நேற்று தெரிவிப்பு



பாடசாலை ஆசிரியர்களுக்குத் தடுப்பூசி செலுத்திய பின்னர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் பாடசாலைகளை மீண்டும் திறப் பதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக் கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதனிடையே, கொழும்பு பிராந்தியத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இன்று ஆரம்பமாகியுள்ள தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நாளை வரை தொடரும் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

நாட்டில் 2 லட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர் என்றும், அவர்களில் பெரும்பாலானோருக்கு ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

இதன்போது, ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் முன்னெடுத்த போராட் டத்தில் இடம்பெற்ற கைது நடவடிக்கை காரணமாக இணையவழிக் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளமை தொடர்பிலும் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர், சில ஆசிரியர்கள் மட்டுமே இன்று கற்பிப்பிலிருந்து விலக நடவடிக்கை எடுத் துள்ளனர் என்றும், இருப்பினும், இணைய வழி கல்வியைத் தொடர வேண்டும் என்றாலும் அது நிரந்தரத் தீர்வு அல்ல என்றும் குறிப்பிட்டார்.

# இணையவழிக் கல்வியில் அரசுக்குப் பெரும் தோல்வி

## யாழில் இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு



(இ.கலையமுதன்)

மாணவர்களின் இணைய வழிக் கல்வியில் அரசு பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் தலீசன் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நடைமுறையில் உள்ள இணையவழிக் கல்வியை நிறுத்துமாறு அனைத்து ஆசிரியர் தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ளன. அதற்கமைய இணையவழிக் கல்வியை நிறுத்துகின்றோம்.

மாணவர்களின் இணையவழி கல்வியில் அரசு பெரும் தோல்வியைச் சந் தித்துள்ளது. இதனடிப்படையிலேயே மீண்டும் பாடசாலை ஆரம்பிப்பது, பரீட்சைகளை நடத்தி சாதரண மான நிலையில் அனைத்தும் உள்ளது என்று கூற அரசு முனைகின்றது.

மலையக மக்களது 1,000 ரூபா சம்பளம் பெரும் பிரச்சினையாக உள்ள நிலையில் அந்த மாணவர்களின் இணையவழிக் கல்வி சாத்தியமற்ற ஒன்று. இணைய வசதிகள் அற்ற நிலை யில் மரத்திலும், கூரைகளிலும், மலைகளிலும் ஏறி 'சிக்னல்' பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதில் மாணவர்களின் இணையவழிக் கல்வி என்பது 15 வீதமே சாத்தியமாகியுள்ளது– என்றார்.

# இலங்கை ஜனநாயக நாடென்பதை அரசு கேள்விக்குறி ஆக்கியுள்ளது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

இலங்கை ஜனநாயக நாடு என்பதை அரசாங்கம் தற்போது கேள்விக்குறியாக்கியுள்ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு -

ஜனநாயக ரீதியிலான வன்முறையற்ற போராட்டங்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமை அல்லது அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றமை ஆகியவை இலங்கை ஜனநாயக நாடு என்பதைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

மேலும் எதிர்கால நலன்களைக் கருத்தில் கொள்ளாது கல்விக்கொள்கை உள்ளிட்ட முக்கிய விடயங்களில் தான்றோன்றித்தனமாக அரசாங்கம் சில முடிவுகளை எடுக்கின்றமை ஜனநாயக விரோத செயற்பாடாகும்.

அதாவது தற்போது ஏற்படுத்தப்படவுள்ள சட்டமூலங்கள் ஒட்டுமொத்த நாட்டின் கல்விக்கொள்கைகளை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இதனை ஒரு சமூகமன்றி பல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் மாணவர்கள் இழந்துபோன கல்வியை மீட்டெடுக்க அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்கின்ற பணிகளைக்கூட அரசு மதிப்பதாகத் தெரியவில்லை.

அத்துடன் அரசாங்கம், ஜனநாயக வழிமுறைகளுக்கு மதிப்பளித்து, அனைத்துச் சமூகமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

இல்லையேல் ஒரு தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் ஒட்டுமொத்த நாட்டு மக்களாலும் விரைவில் முன்னெடுக்கப்படும் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## குறிகாட்டுவானில் கரையொதுங்குகின்றன இந்திய மருத்துவக் கழிவுப் பொருள்கள்



யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் கடற்கரைப்பகுதிகளில் மருத்துவ கழிவுகள் கரையொதுங்கி வருகின்றன.

இந்தியமருத்துவக் கழிவுகளே குறிகாட்டுவான் கடற்கரையில் இவ்வாறு கரையொதுங்கி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நயினாதீவு கடற்கரை பகுதிகளிலும் பெருமளவான மருத்துவக் கழிவுகள் கரையொதுங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




## ஆசிரியர்கள் தடுப்பூசியைப் பெறுவதற்கு தூர இடம் செல்லத்தேவையில்லையாம்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

ஆசிரியர்கள் தடுப்பூசியை பெறுவதற்கு தூர இடங்களுக்கு செல்லத் தேவையில்லை என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

நாடளாவிய ரீதியில் ஒரு மாவட்டத்தில் இருந்து இன்னொரு மாவட்டத்திற்கோ அல்லது இன்னொரு மாகாணத்திற்கோ செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் வேறு மாவட்டத்திற்கோ அல்லது மாகாணத்துக்கோ கடமைக்காகச் செல்வோர் தற்போதுள்ள சூழ்நிலையில் கடமைக்கே செல்ல முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

மேலும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் அவர்கள் கடமைக்குச் செல்லவேண்டிய அவசியமும் தற்போது இல்லை.

இந்நிலையிலேயே தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்காக தூர இடங்களுக்குச் சென்று, தடுப்பூசி ஏற்றிய பின்னர் நெடு தூரப்பயணம் மேற்கொள்வது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம்.

எங்களது நியாயமான கருத்தை ஏற்றுக்கொண்ட பணிப்பாளர், தற்போது ஒதுக்கப்பட்ட ஊசிகள் முடிவடைந்துள்ளன எனவும் கிடைக்கும் வரை பொறுத்திருந்து அதனை தங்கள் பிரதேசங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார். - என சரா.புவனேஸ்வரன் கூறியுள்ளார்.

## யாழ். குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றுக்கு நீதிபதி பிரேமசங்கர் நேற்று திங்கள் முதல் நியமனம்



மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் மீண்டும் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் இந்த நியமனத்தை நேற்று (திங்கட்கிழமை) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கியுள்ளார் என்று அறிய முடிகிறது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சுமார் 10 மாதங்களின் பின்னர் குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வை மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர்ஷ, தாவூத் லெப்பை அப்துல் மனாப் ஆகிய இருவரும் நேற்று திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கிறார்கள்.

இதேவேளை, 2018 மே 26 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக அன்னலிங்கம் பிரேமசங்கர் கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மஸ்கெலியா பிரதேசசபை எதிரணியினர் போராட்டம்



மஸ்கெலியா பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர்கள், போராட்டமொன்றை நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுத்துள்ளனர்.

மஸ்கெலியா பிரதேச சபைக்கு முன்பாக, சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அதாவது அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், எரிபொருள்களின் விலை ஆகியவற்றை உடனடியாகக் குறைக்குமாறும் தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்தும் மலையகத்தில் தடுப்பூசி திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1,000 ரூபா வழங்கப்படுகின்றது எனக் கூறப்பட்டாலும் வேலைநாள்கள் குறைக்கப்பட்டு, தொழில் சுமை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேபோன்று ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.07.2021 இல் வெளியிடப்பெற்றது.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 49ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**481. இறுதியாக நடைபெற்ற கோபா அமெரிக்க கால்பந்தாட்டத் தொடரில் மெஸ்ஸி அடித்த கோல்களின் எண்ணிக்கை யாது?**
**482. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா யாது?**
**483. உலகில் உள்ள கண்டங்கள் எத்தனை?**
**484. வாழையின் இளையது எவ்வாறு அழைக்கப்படும்?**
**485. பைஸர் தடுப்பூசி எந்த நாட்டினுடையது?**
**486. இலங்கையின் தேசியப் பறவை எது?**
**487. 8, 12, 20, 32, 48, ......... என்ற எண் கூட்டத்தில் அடுத்து வரும் இரு எண்களும் எவை?**
**488. இந்தியாவின் தற்போதைய தமிழக முதலமைச்சர் யார்?**
**489. விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை ஜோகோவிச் இதுவரை எத்தனை தடவை வென்றுள்ளார்?**
**490. விஜய் நடிப்பில் இறுதியாக வெளியான படம் எது?**

பெயர் :- ................................................ அடையாள அட்டை:- ................................
முகவரி :- ................................................ மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 47ஆவது போட்டிக்குரிய பதில்கள்

461. 40m
462. வடலி
463. போர்த்துக்கல் (இத்தாலி - 2021)
464. பாகிஸ்தான்
465. 32,128
466. கார உலோகங்கள்
467. வெள்ளி விழா
468. இங்கிலாந்து
469. Hz
470. ஜேக்கப் ஜீமா

## 11ஆம் திகதி வெளியான 47ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

ஐ.கார்த்திகன் - யாழ்ப்பாணம் (10சரி)
ரி.சராதரன் - குப்பிளான் (10சரி)
எம்.வர்ணபாலன் யாழ்ப்பாணம் (10சரி)
எஸ். சதுர்ஜினி - அல்வாய் (9 சரி)
செ. ஸ்ரீஇராமச்சந்திரன் (9 சரி)
கே. அனுஷன் - ஏழாலை (8சரி)
பி.ஸ்ருதி - மட்டக்களப்பு (8 சரி)
எஸ்.துவாரகா - மட்டக்களப்பு (8சரி)
ஜெ.வினோஜன் - குடத்தனை (7சரி)
யு.ஜாமளை - கொழும்பு (7சரி)
எச். றிஸ்மியா - தெல்தோட்டை (7 சரி)
ஏ.துஷான் - நீர்வேலி (7சரி)
ஆர். மாலதி - உடுப்பிட்டி (8 சரி)

## ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் சிலாபம் நகரபிதா கைது

*சிலாபம் நகர சபைத் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*நபர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.*

## பொலிஸாரின் கடமைக்கு இடையூறு சுழிபுரத்தில் இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம் - சுழிபுரத்திலுள்ள கசிப்பு உற்பத்தி செய்யும் பகுதியை முற்றுகையிடச் சென்ற பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை - சுழிபுரம், வறுத்தோலை பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த தகவலுக்கமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை, அப்பகுதியிலுள்ள வீட்டுக்கு சென்ற பொலிஸாருக்கும் அங்கிருந்த பெண்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது அருகிலுள்ள வீட்டில் வசிக்கும் இளைஞன் ஒருவரும் சம்பவ இடத்துக்கு வந்தபோது, வாக்குவாதத்தில் ஈடுபட்ட பெண்கள், அந்த இளைஞன்தான் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார் எனக் கூறி, பொலிஸாருக்கு முன்னாலேயே அந்த இளைஞனை கொட்டனால் தாக்கினர்.

குறித்த சம்பவத்தால் காயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலும் சம்பவத்துக்கு காரணமான பெண்களை பொலிஸார் கைது செய்ய முற்பட்ட வேளையில் அவர்களது உறவினரான ஆண் ஒருவர், பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

இதனால் குறித்த ஆணையும் இளைஞனை தாக்கிய பெண்ணையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் அந்த பெண்ணின் வீட்டில் இருந்து 40 லீற்றர்கள் கோடாவும் ஒரு லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பாகிஸ்தான் தூதரக செயலர் சனியன்று காரைதீவு விஜயம்

(காரைதீவு நிருபர் சகா)

பாகிஸ்தான் நாட்டு இலங்கை தூதரகத்தின் இரண்டாவது செயலாளர்(அரசியல்) திருமதி ஆயிஷா அபூபக்ர் பஹறாட் கடந்த சனிக்கிழமை காரைதீவுக்கு விஜயம் செய்தார்.

முன்னதாக காரைதீவு பிரதேச சபைக்கு விஜயம் செய்த அவர் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தார்.

அதன்போது தமிழர்களும் முஸ்லிம்களும் இரண்டறக்கலந்து வாழும் காரைதீவுப் பிரதேசத்தின் தேவைகள் பற்றி விலாவாரியாகத் தவிசாளர் எடுத்துரைத்தார். செயலாளர் திருமதி பஹறாட் கூறுகையில் -

நான் பாகிஸ்தான் நாட்டின் பிரதிநிதியாக வருகைதந்தாலும் உங்களது தேவைகளை பொதுவாகவே பார்க்கிறேன். எமது நாட்டில் இந்துக்கள் வாழ்கிறார்கள். அதற்கான அடையாளங்கள் இன்றும் பேணப்பட்டு வருகின்றன. எனவே முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் அங்குள்ள ஏனைய இனங்களுடன் ஒன்றாக அந்நியோன்யமாக வாழ்வதையே விரும்புகின்றனர். அதற்கமைய எமது உதவியென்பது தனியே ஓர் இனத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படமாட்டாது. - என்றார்.

பின்னர் அவர் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்து அதிபர் ம.சுந்தரராஜன் குழுவினருடன் கலந்துரையாடினார்.

அதன்போது கல்வியமைச்சின் உயரதிகாரி. எ.எம்.தாஜுதீன் உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டனர்.